746

பொன்னி

PONNI 10-11-51

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 DEC 951



சிந்தனை விருந்து

இலக்கியச் சந்தையில்	...	மு. அண்ணாமலை	...	0—8—0
மதம் அவசியமா?	...	கட்டுரைகள்	...	0—12—0
வருங்காலத் தமிழகம்	...	அறிஞர் அப்பாத்துரை		0—12—0
சங்க இலக்கிய மாண்பு	...	,,	...	0—6—0
இந்திய மொழிச் சிக்கல் (ஆங்கிலம்)	...	,,	...	2—8—0
தபாலாபீஸ் வினோதங்கள்	...	க. சண்முகசுந்தரம்	...	0—8—0
பெரியாரும் கவிஞரும் அண்ணாவும்		எஸ். சதாசிவம்	...	0—8—0
முதலாளித்துவம் ஒழிக	...	,,	...	0—12—0
கார்ல்மார்க்ஸ்	...	,,	...	0—12—0
ஏழையின் அரசியல்	...	,,	...	0—8—0
அண்ணா யார்?	...	வழிப்போக்கன்	...	0—8—0

ரூபாய் 5-க்குக் குறைந்து வி. பி. பி. அனுப்பப்படமாட்டாது.
முன்பணம் அனுப்புவோருக்கு மட்டுமே தபாற் செலவு இலவசம்.

பொன்னி லிமிடெட் :: சென்னை-21

ஜூபிடர்
ரிலீஸ்
விநோதாவின்
ஸ்ரீஸாகஸம்
உரிமையாளர்கள் பெல்பிக்சர்ஸ்
வசனம்:
உதயகுமார்
டைரெக்ஷன்:
வேதாந்தம் ராகவய்யா
... விரைவில் வருகிறது ...

நவம்பர் 15–ல் எங்கும் கிடைக்கும்

விருந்து
இலக்கிய வரிசை

4

துவிஜேந்திரலால் ராய் வரைந்த வங்காளி நாடகம்

நூர்ஜஹான்

★

தனிப்பிரதி அணு 8 — தொடர்ந்துவரும்
12 புத்தகங்கள் அனுப்பக் கட்டணம் ரூ. 6

விபரங்கட்கு:

பொன்னி லிமிடெட் :: சென்னை-21

குறிப்பு: வி. பி. பி. கிடையாது. தனிப்பிரதி வேண்டுவோர்
9 அணு தபால் தலை அனுப்ப வேண்டும்.

வாங்கிவிட்டீர்களா?

கலாசக்தியின் 0-1-0
சிறுவர் வெளியீடுகள்

1. ஐஸ்கிரீம்
2. ஆனந்தி
3. பலே விச்சு
4. பரமசிவம்
5. பீரங்கி
6. ராஜகுமாரி
7. சூரத்தம்பி
8. ஸ்கூல் ட்ராமா
9. பாராசூட் வீரன்
10. சர்க்கஸ் ராணி
11. ரெள்டி ரங்கன்
12. சினிமா
13. டார்பிடோ
14. சிங்கம்
15. சரோஜா
16. கோமாளி
17. லட்டு லட்டு
18. மல்கோவா

0-2-0 புத்தகங்கள்

1. டுமீல் ரெங்கன்
2. மோட்டார் படகு
3. ரேடியோ மனிதன்
4. இளவரசி மல்லிகா

0-3-0 புத்தகங்கள்
(2-ம் பதிப்பு)

1. துப்பறியும் தாமு
2. அபூர்வ நண்பர்கள்

வியாபாரிகள் 25% கமிஷன் நீக்கி V. P. யில் பெறலாம்.

சிறுவர்கள், தேவையான புத்தகங்களுக்கு, போதிய தபால் தலைகள் அனுப்பிப் பெறலாம்.

கலாசக்தி பிரசுரம்,
நேமத்தான்பட்டி P. O.
(Ramnad Dt.)

... OF THE REGISTRAR OF BOOKS
10 DEC 1951
MADRAS

தாக சாந்தி

சீர்திருத்தக்காரர்களும், புரட்சியாளர்களும் திடுக்கிட்டுத் தயங்கக்கூடிய துணிவான கருத்தும்; இருண்டு, பாழான உள்ளக் கோவில்களுக்கு ஒளிதரும் உணர்ச்சியுமமைந்த — சிறுகதை —

ஆசிரியர் :
திரு. எஸ். ஐ. அருள்தாஸன்

முன்னுரை :
பேரறிஞர் டாக்டர் மு. வரதராசனர்
M. A., M. O. L., Ph., D.,

விலை 8 அணு

இதர கருத்தேடுகள் :

பிணக்குவியல்	0—4—0
டெல்லியின் சுதந்திரக் கீதம்	0—2—0

விற்பனைக் கழிவு 25% முன் பணத்தோடு எழுதுக. மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் புத்தகக் கிரயத்தைத் தபால் பில்லைகளாக அனுப்பவும் தபால் செலவு இலவசம்.

குமரன்
நினைவுப் பதிப்பகம்
இராபர்ட்ஸன்பேட்டை
கோலார் பொன்வயல்

புதிய வெளியீடுகள்

இன முழக்கம் (மு. கருணாநிதி) 0-8-0
கனல் கக்கும் நடையில், மங்கிக் கிடக்கும் தமிழகத்திற்கு உணர்ச்சியூட்டும் நூல்!

திராவிட சம்பத்து (மு. கருணாநிதி) 0-3-0
சில சுயநலக்காரர்ன் சூழ்ச்சியைத் தூளாக்கும் நூல்!

சிந்தனைத் துளிகள் (இராதாமணாளன்) 0-4-0
இராதாமணாளனின் கருத்துத் தொகுப்புக்கள்!

ரஷ்யப் பிரச்சனை 1-4-0
ஸ்டாலின் பரிசு பெற்றது. புதிய இரண்டாம் பதிப்பு!

தங்கத் தாமரை (தில்லை வில்லாளன்) 1-0-0
சுவை நிறைந்த கதை. இரண்டாம் பதிப்பு!

விற்பனையாளர் கழிவு 25%. அனுப்பும் செலவு இலவசம்

பாரி நிலையம்

59, பிராட்வே சென்னை—1

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து தேவி பில்ஸ்) REGD. BY CENTRAL DRUGS LABORATORY OF GOVT. OF INDIA. UNDER NO. CDL / 688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)
Government Registered No. 266

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாகக் கருவைத் தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்ப்ரவரியாக கருவைத் தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: **SEENU & CO., P. B. 1638, (6) Madras-1**

பிராஞ்சு: *134, SERANGOON ROAD* சிங்கப்பூர்

சிலோன் ஏஜண்ட்:

NEW COLOMBO MEDICAL STORES, 82, Main st., கொழும்பு-1

பொன்னி
பொருளடக்கம்

மலர் 5 | நவம்பர் 10, 1951 | இதழ் 17

திருவள்ளுவர் ஆண்டு 1982 ஐப்பசித் திங்கள் 24-ம் நாள்

ரகசிய லாபக்காரர்கள்	....	அண்ணுதுரை	5
மாஸ்டர் சர்ச்சில்	...	கார்ட்டூன்	6
சர்ச்சில் வெற்றி	...	தலையங்கம்	7
காலமும் கருத்தும்	....		9
வளரும் இலக்கியம்	....	பூவை	13
குழந்தை இன்பம்	....	முடியரசன்	17
நமக்குள்ளே	....	சுகி	19
ராஜா ராணி	....	தங்கமணி	25
காதலர்கள்	....	எஸ். ஆறுமுகம்	30
ஆடும் மாடும்	....	டி. கே. சீனிவாசன்	35
யாருக்கு உங்கள் வாக்கு?	....	கடிதங்கள்	44
மகிழ்ச்சி நிறைந்தது	....	புதுமைச்சித்தன்	46
பொழுது போக்கு	...	விநோதன்	52
அவள் சிரித்தாள்!	...	வீர. பழனியப்பன்	54

ரகசிய லாபக்காரர்கள்

டெல்லி சர்க்காருக்கு வாய்த்துடுக்கு இருக்கிறதேயன்றி நாட்டை யாளும் திறமை சிறிதுகூட இல்லை. பத்து முதலாளிகள் சேர்ந்து கொண்டு பண்டித நேருவைப் பதுமைபோல் மிரட்டுகின்றனர். தேர்தலுக்கு முன் நேரு கள்ளமார்க்கட்காரர்களைக் கழுவிலேற்று வேன் என்று கூறினுர். ஆனுல் அதற்குப்பின் கள்ளமார்க்கட் கழுகுகளை வேண்ட ஆரம்பித்தார். நீங்கள் அடித்த கொள்ளை லாபத்திலே—கள்ளமார்க்கட் வாணிபத்திலே பெற்ற பெருந்தொகையிலே பார்த்துச் சிறுதொகை உதவுங்கள் என்று மடிப்பிச்சை கேட்டார்! இந்தக் கழுகுகளுக்கு 'ரகசிய லாபக்காரர்கள்' என்ற புது மெருகும் கொடுக்கப்பட்டது சுயராஜ்ய ஆட்சியிலே!

[குன்றத்தூரில் பேசும் போது தி. மு. க. பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணுதுரை இவ்வாறு குறிப்பிட்டார்,]

மாஸ்டர் சர்ச்சில்!

177802
600 008

சர்ச்சில் வெற்றி

பிரிட்டனில் பொதுத் தேர்தல் முடிந்து சர்ச்சில் மந்திரி சபை அமைத்துவிட்டார்; ஆட்லியைத் தலைவராகக் கொண்ட தொழிற் கட்சியினர்—நேற்றுவரை அரசோச்சியவர்கள்—இன்று எதிர்க்கட்சியினராக மாறியிருக்கிறார்கள்! மிகக் குறைந்த அளவு 'மெஜாரிட்டி' யோடுதான் கன்சர்வேடிவ் கட்சி வெற்றியடைந்திருக்கிறதென்றாலும் இத்தகைய திடீர் மாறுதல்கள் பிரிட்டனில் மட்டும்தான் சாத்தியம் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

தேர்தலுக்குப் பின் நடைபெற்ற முதல் பார்லிமெண்ட் கூட்டத்திற்குச் சர்ச்சில் வந்ததும் எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்தாராம்! பார்லிமெண்ட் மெம்பர்கள் கைதட்டி ஆரவாரம் செய்த பிறகே 'தாம் பிரதம மந்திரி' என்ற நினைவு அவருக்கு வந்திருக்கிறது! இந்த ஒரு நிகழ்ச்சியே போதும், பிரிட்டனில் ஜனநாயகம் எந்த அளவுக்கு வல்லமை பெற்றிருக்கிறதென்பதை விளக்க. எதிர்க்கட்சியை ஆளும் கட்சியாக்கவும், ஆளும் கட்சியை எதிர்க்கட்சியாக்கவும் பிரிட்டிஷார் நன்கு தெரிந்துவைத்திருக்கிறார்கள் என்பதையே இத்தேர்தல் விளக்கியிருக்கிறது!

முற்போக்குலகம் சர்ச்சில் கட்சியையும் அவர் கொள்கைகளையும் விரும்பாதிருப்பது இயற்கையே! 'போர் வெறியர்' என்ற புகழ் அவரை ஒட்டிப்போயிருக்கிறது. காமன்வெல்த் நாடுகள் சுதந்திரம் பெற்றதை விரும்பாமல் அவர் நடந்துகொண்டதால் 'ஏகாதிபத்ய வாதி' என்ற ஏச்சும் அவரைச் சூழ்ந்திருக்கிறது. தொழில்களைத் தேசியமயமாக்குவது என்ற ஆட்லி சர்க்கார் திட்டம் அவர் கட்சிக்குக் கசக்கும் வேப்பெண்ணெய்! இரும்பு உருக்குத் தொழிலை மீண்டும் தனிப்பட்டோரிடம் ஒப்படைக்கப் போவதாக அவர் சர்க்கார் எடுத்த எடுப்பிலேயே கூறியிருக்கிறதெனில் தனிப்பட்டோரின் தொழிலாதிக்கத்துக்கு அவர் எத்துணை சார்பானவர் என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். இத்தனை 'வேண்டா வெறுப்பு' ஆசாமியைப் பிரிட்டிஷ் மக்கள் எப்படித் தேர்ந்தெடுத்தார்கள் என்பது கேள்விக்குரிய செய்தியே ஆகும்!

ஆனால் சர்ச்சிலுக்கு முழு ஆதரவு கிடைத்துவிட்டதென்றோ ஆட்லி கட்சியினர் முழுத் தோல்வி அடைந்துவிட்டனரென்றோ தேர்தல் முடிவுகள் காட்டவில்லை. முன்பு தொழிற் கட்சியினர் இருந்த நிலையில்—சிறிய எண்ணிக்கை கூடுதலாக—இப்போது சர்ச்சில் கட்சியினர் இருக்கின்றனர்! இந்த மாறுதல் கூட ஏன் நிகழவேண்டுமென்று விளக்கம் கேட்பது இயற்கை! ஆட்லி

சர்க்கார் ஆட்சிப் பீடத்தில் ஏறக்குறைய ஆறு ஆண்டுகள் இருந்து வந்திருக்கின்றனர்; அவர்களுடைய திட்டங்கள் எத்தன்மையான வையோ, ஒவ்வொன்றும் சிலருக்கு அதிருப்தியை அளித்திருக்கத் தானே வேண்டும்! அந்த அதிருப்தி ஓரளவுக்குத் தொழிற்கட்சி யின் பலத்தைக் குறைத்திருக்கலாம். மற்றொரு காரணமும் உண்டு. உலக விவகாரங்களில் பிரிட்டனின் நிலை ஆட்லி சர்க்காரில் மிகத் தாழ்ந்துவிட்டது என்பது என்னவோ உண்மைதான்! பிரிட்டன் பேச்சுக்கு மதிப்புக் குறைந்து ரஷ்யாவும் அமெரிக்காவும் உலக விவகாரங்களைத் தங்கள் விவகாரங்களாக ஆக்கிக்கொண்டுவிட்ட நிலை பிரிட்டிஷ் மக்களுக்குப் பிடிக்காமற் போனதும் சர்க்கார் மாற்றத்திற்கு உதவியிருக்கலாம்.

எவ்வாறோ, மாற்றம் நிகழ்ந்துவிட்டது. உலகப் போக்கில் சர்ச்சில் பெரிய மாறுதல்களை உண்டுபண்ணி விடுவாரென்றோ, பிரிட்டனை மறுபடியும் முதல்தர வல்லரசாக ஆக்கி விடுவா ரென்றோ, யாரும் எதிர்பார்த்தால் அது வீண் கனவாகத் தான் முடியும். சர்ச்சிலின் கைப்பிடியில் உலகம் மறுபடியும் சிக்காது என்பதும் உலகப் போர் அவர் அழைப்பை ஏற்காது என்பதும் திண்ணம். பிரிட்டனில் இடைக்கால ஏற்பாடாக, உல்லாசமான பொழுதுபோக்காகவே இந்த மாறுதல் நிகழ்ந்திருக்கிறதென் பதை விரைவில் உலகம் புரிந்து கொள்ளுமென்பது உறுதி!

வெளிவந்துவிட்டது!

சிநேகிதி

அகிலன் எழுதிய நாவல்

தமிழ் நாட்டில் எழுத்தாளர் நிலை, இலக்கிய வளர்ச்சி, பத்திரிகையாளரின் போக்கு, சினிமா உலகம் முதலியவற்றைச் சூழ்நிலையாகக் கொண்டு இந்த அழகான காதல் நவீனத்தை எழுதியிருக்கிறார் ஆசிரியர். இளம் எழுத் தாளரின் காதல் கதை இது.

"காதல் உலகில் ஒப்பற்ற புரட்சி—அன்புப் புரட்சி—நிகழ்ந்து வெற்றி பெறுகிறது. இந்தக் கதை பிறந்த உள்ளத்தை வாழ்த்தத்தான் வேண்டும்" என்கிறார் டாக்டர் மு. வரதராசன் அவர்கள் தமது முன்னுரையில்.

விலை ரூ. 2-8-0 உயர்ந்த பதிப்பு ரூ. 3-0-0

பழனி பிரசுரம்

மணிக்கூண்டு :: புதுக்கோட்டை

காலமும் கருத்தும்

சூயஸ் நெருக்கடி

சூயஸ்கால்வாய்ப் பிரதேசத்தை விட்டுப் பிரிட்டன் வெளியேறிவிட வேண்டுமென எகிப்து சர்க்கார் கூறிவிட்டது! ஆனால் பிரிட்டிஷ் படைகள் அந்த இடத்தை விட்டு அசையாததோடு மேலும் மேலும் புதுப்படைகளை அங்கு வரவழைத்துக்கொண்டிருக்கின்றன. பாரசீகத்தை விட்டுச் 'காலி செய்த' பிரிட்டிஷார் சூயஸில் 'விடாப்பிடியாக'இருந்து வருவதன் பொருள் புரியவில்லை. எகிப்துக்கு உலக ஆதரவு இருக்கிறது. இந்தியப் பிரதமர் நேரு எகிப்தின் கோரிக்கைகள் நியாயமானவை என்று தெரிவித்திருக்கிறார். அரபு நாடுகள் அனைத்தும் எகிப்தை ஆதரிக்கும் என்பது வெளிப்படை. எகிப்து மக்கள் பிரிட்டனின் இந்தத் தவறுதலான போக்கை நெடுநாள் பொறுத்துக்கொண்டிருக்க மாட்டார்கள் என்றே தெரிகிறது. வரும் செய்திகள் இந்த உண்மையைத்தான் எடுத்துக் காட்டுகின்றன. எகிப்து சர்க்கார் 'அமைதி வழி'யில் தங்கள் லட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ள விரும்பினாலும், கலகங்களும் கொந்தளிப்பும் ராணுவச் சந்திப்பும் இந்நிலையிலேயே தவிர்க்கமுடியாமல் இருக்கின்றன. சர்ச்சில் சர்க்கார் எகிப்தை விட்டுப் பிரிட்டிஷ் படைகளை வெளியேற்றும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. இதே உறுதி எகிப்து சர்க்காரிடமும் இருக்கிறது. முடிவு சூயஸ் நெருக்கடி எத்தனையோ தீராத நெருக்கடிகளில் ஒன்றாக ஐ. நா. சபையில் இடம் பெறுவதாகத்தான் இருக்கமுடியும்! வேறு வகையில் உடன்பாடு சாத்தியமெனத் தெரியவே இல்லை.

ஆசிரியர்கள் பற்றுக்குறை

கோழிக்கோட்டில் அண்மையில் நம் கல்வி அமைச்சர் பேசும்போது "இனிச் சில ஆண்டுகளுக்கு உயர்நிலைப்பள்ளி தொடங்க அனுமதி தருவதில்லை எனச் சர்க்கார் முடிவுசெய்திருக்கிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்த ஆண்டில் மட்டும் 300 ஹைஸ்கூல்கள் திறக்கப்பட்டிருப்பதாகவும் போதுமான அளவு போதனாமுறைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாமல் கல்வியின் தரம் பாழ்படுகிறதென்றும் அதனாலேயே புது ஹைஸ்கூல்கள் வேண்டாமென்று முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் விளக்கம் தந்திருக்கிறார். கல்வியின் தரம் பாழ்படுவதைத் தடுக்கவேண்டியதுதான்! அதற்காகப் புதிதாகப் பள்ளிக்கூடமே தொடங்கக்கூடாது என்றால் யார் ஒப்புக்கொள்வார்கள்? கல்வியை விரும்

பிப் பயில மக்கள் முன்வரும் இச் சமயத்தில் 'போதுமான ஆசிரியர்கள் இல்லை' என்ற காரணம் காட்டிப் பள்ளிகள் பெருகுவதைத் தடுப்பது யாரும் நினைக்க முடியாத சீர்திருத்தம்! போதனா முறைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தொகையைக் கூட்ட வழி வகைகளை ஆராயவேண்டும். ஆசிரியர் வேலை வருவாய்மிக்கது என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். போதனாமுறைப் பயிற்சி பெறுவதைச் சுலபப் படுத்தித் தேவையான அளவுக்கு ஆசிரியர்கள் பயிற்சிபெற ஏற்பாடு செய்வது அவ்வளவு கடினமல்ல. மனமிருந்தால் வழியுண்டு. பள்ளிகளைத் தொடங்கவேண்டாமென்று கூறுபவர்களுக்கு எப்படி வழி தெரியும்?

வடிகட்டும் பழக்கம்

எஸ். எஸ். எல். சி. தேர்வுக்கு முன்னால் மாணவர்களை 'வடிகட்டி' அனுப்புவதென்ற பழக்கத்தைச் சென்னை அரசினர் கடந்த இரண்டு ஆண்டுகளில் நீக்கிவிட்டார்கள். மறுபடியும் 'செலக்ஷன் முறை' அமுலுக்கு வரவேண்டுமென்று தலைமை ஆசிரியர்கள் வற்புறுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். அதற்கு அவர்கள் கூறும் காரணம் மாணவர்கள் கட்டுப்பாடு, 'செலக்ஷன்' இல்லாவிட்டால் கெட்டுவிடுகிறது என்பதுதான்! எஸ். எஸ். எல். சி. க்கு வந்த பின்னர்த் தலைமைஆசிரியர் தயவோ, மற்ற ஆசிரியர்கள் தயவோ இனித் தங்களுக்கு வேண்டியதில்லை என்று மாணவர்கள் நினைத்துவிடுவதாகவும், பள்ளிக்கு ஒழுங்காக வராமலும் கட்டுப்பாடுகளை மதியாமலும் நடந்துகொள்வதாகவும், 'வடிகட்டும் அதிகாரம்' இருந்தால், அவர்கள் 'கடைசி வரையில்' தங்களிடம் 'மரியாதையாக' நடப்பார்களென்றும் காரணம் காட்டப்படுகிறது. இக்கூற்றில் ஓரளவுக்கு உண்மையிருக்கலாம். ஆனால் 'செலக்ஷன்' ஏற்பாடு, எக்காரணத்தாலோ பிடிக்காமற் போகிற மாணவர்களைப் பழி வாங்கவே பெரும்பாலான இடங்களில் கையாளப்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. மீண்டும் 'வடிகட்டும் அதிகாரம்' தரப்பட்டால் இவ்வாறு நடக்காதென்பதற்கு யார் உறுதிகூற-முடியும்? எனவே 'செலக்ஷனை' மீண்டும் அமுலாக்குவது எவ்விதத்திலும் விரும்பத்தக்கதல்ல. பள்ளிகளில் ஒழுங்கை நிலைநிறுத்த வேறு வழிகளை ஆலோசிப்பதே பொருத்தமாகும்.

நேரு விளக்கம்

சென்னை முதலமைச்சர் குமாரசாமி ராஜா நேருவுக்குப் பர்மா விளைச்சலைச் சுட்டிக் காட்டிக் கூடுதல் அரிசி கேட்டார்; அரிசியைக் குறைப்பதால் ஏற்படும் அவதிகளை விவரித்தார். நேரு தம் பதிலில் "பர்மாவில் விளைச்சல் இல்லை; உள்ளதும் குறையலாமென்றார் தக்கின் நூ. நான் கூடாதென்றிருக்கிறேன். எனவே அதிகம் எதிர்பார்ப்பது

அடாது. இல்லாத பொருளுக்கு ஏங்கி என்ன செய்வது? அரிசி கிடைக்கவில்லையென்றால் மாற்று உணவுப் பொருளைச் சாப்பிட்டுப் பழகிக்கொள்ளத் தான் வேண்டும்'' என்று விளக்கம் தந்திருக்கிறார். சென்னை மக்கள் இவ் விளக்கத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமென நேரு எதிர்பார்க்கிறார்! ஆனால் இவர்களுக்கு அத்தனை 'தெளிவு' ஏற்படாமல் இருப்பதுதான் ஆச்சரியம்! மைலோவையும் கோதுமையையும் திருப்பி விடுகிற அளவுக்கு இவர்களின் 'அரிசிபக்தி' பொங்கி வழிகிறது! ரேஷனில் நேரு தரும் அரிசியைச் சாப்பிட்டுத் திருப்தியடையும் சுவாபமும் இல்லை! பற்றுக்குறையை 'யாரோ' நிரப்பிவிடுகிறார்கள்! நேரு, உலகத்திலேயே இல்லை என்று கூறுகிற அந்தப் பொருள் 'யாராலோ' 'யாராருக்கோ' கணக்குவழக்கின்றி மிகச் சர்வ சாதாரணமாக வழங்கப்பட்டு வருவதுதான் விந்தையிலும் விந்தை! இந்த 'விந்தை மனிதர்கள்' கள்ளமார்க்கட்டில் அரிசிபெற்றுண்பது 'தேசத் துரோகமான' செயலென்பதையும், 'அரிசி கிடைக்கவில்லையா? கோதுமையைச் சாப்பிடு' என்று காலநிலைக் கேற்ப உணவுப் பழக்கத்தை மாற்றிக்கொள்வது 'தேசபக்தி' என்பதையும் எப்பொழுதுதான் புரிந்துகொள்ளப் போகிறார்களோ?

அமைச்சரும் தூதுவரும்

சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் டில்லியிலிருந்து 'சாந்தி' பெறச் சென்னை வந்திருக்கிறார். அமைச்சர் பதவியைத் துறந்து டில்லியினின்றும் விடைபெற்று 'பெற்ற பொன்னாட்டை'த் தேடி வந்திருக்கிறார். திருமதி விஜயலட்சுமி பண்டிட் அமெரிக்காவில் இந்தியாவின் தூதுவர். அவர் அப்பதவியைத் துறந்து தேர்தலில் போட்டியிட, பார்லிமெண்டில் அங்கம் வகிக்க, மந்திரிசபையில் இடம்பெற டில்லிநோக்கி வருகிறார்! ஒரு பக்கம் அமைச்சர் பதவியினின்றும் விலகும் ஆச்சாரியார்! மறுபக்கம் அதனைத் தேடி ஓடி வரும் விஜயலட்சுமியார்! அரசியல் வாழ்க்கை ஒரு சிலருக்குச் சலிப்பை ஏற்படுத்திவிடுகிறது; மற்றும் சிலருக்கு நல்ல 'சுவைப் பொருளாக' மாறிவிடுகிறது; இந்த உண்மையையே இந்த இரு நிகழ்ச்சிகளும் விளக்குகின்றன.

நிலக்கரி வளம்

தென்னாட்டின் மூலப் பொருள் வளம் இப்போதுதான் சிறிது சிறிதாகப் புலனாகி வருகிறது. தென்னாட்டுக்கெனத் தனி ஆட்சி இருக்குமானால் இதற்குள் எத்தனையோ உண்மைகள் நமக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கும்! நாட்டு நிலையும் அதன் காரணமாக உயர்ந்

திருக்கும்! ஆனால் மத்திய சர்க்காரின் இரண்டாந்தரக் கவனிப்பிலும் கூட நல்ல செய்திகள் நமக்குக் கிடைத்துவருகின்றன. தென்னாற்காட்டு மாவட்டத்தில் பழுப்பு நிலக்கரி ஐம்பதுகோடி டன்னுக்குமேல் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் பூர்த்தியானால் மின்சாரத்தை மட்டும் நம்பியிருக்கும் சென்னை மாகாணத் தொழில்கள் புது எரிபொருள் வசதியால் மிகவும் முன்னேறக் கூடுமென்று நிபுணர்கள் கூறுகின்றனர். திருச்சி, சேலம் மாவட்டங்களில் 40 கோடி டன் காந்த இரும்பு மூலப்பொருளும், சேலத்தில் எட்டரைக்கோடி டன் மாக்னஸைட் என்ற பொருளும், கடப்பையில் ஐந்துலட்சம் டன் ஆஸ்பெஸ்டாஸ் என்ற பொருளும், சாத்தூரில் 13-கோடி டன் இரும்பு மூலப்பொருளும், மலபாரிலும், தென்கன்னடத்திலும் 500 கோடி டன் பீங்கான் மண்ணும் இருப்பதாக மதிப்பிடப்படுவதாகவும் செய்திகள் கூறுகின்றன. இந்த மூலப்பொருள் செல்வங்களை எல்லாம் தக்கவாறு பயன்படுத்தச் சென்னை ஆட்சியினர் உடனடியாகத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமென விரும்புகிறோம்.

இப்போது விற்பனையாகிறது!

* அலைகடல் ஓரம் அன்றிரவு ஒரு கேள்விக்குறியாக வளைகிறது! இருட்டு அறை இன்பத்தின் ஆச்சரியக் குறியாய் நிமிர்ந்து நிற்கிறது! திடீர் கடிதமொன்று செமிக்கோலனாய் குறுக்கே படுக்கிறது! பின்னர்? – இனிக்கும் காதல், புளிக்கும் காதல், கசக்கும் காதல், துவர்க்கும் காதல் எல்லாவற்றிற்கும் ஒரு பெரிய முற்றுப் புள்ளியே ஓடிவந்து முட்டுக்கட்டை போட்டுக் கொள்கிறது! விளக்கம் வேண்டுமா? விரிவுரை தேவையா?

மதிவாணன் எழுதிய **ஜீவயாத்திரை**

சிந்தனைத் தேக்கத்திலிருந்து சீறி எழுந்த ஒப்பற்ற —உயிரோட்ட நாவல். 70 பக்கங்கள் கொண்டது —

விலை 8 அணாதான்

சித்தார்த்தன் எழுதிய **காதலி தேவை?**

மூவர்ணப் படத்துடன் 15—11—'51ல் வெளிவரும்

சுந்தரவதனி புதிய நாவல்	1-8-0	அன்புத் தீ	0-12-0
முழுமதி	0-8-0	இதய ஓசை	0- 8-0
காதல் பைத்தியங்கள்	0-8-0	காதலன் தேவை	0- 8-0

ஏஜண்டுகளுக்கு 25% கமிஷன் உண்டு

விபரங்களுக்கு:

வைகறை வெளியீடு, திருப்பாதிரிப்புலியூர்.

வளரும் இலக்கியம்

இந்நாள் இலக்கியச் சந்தையில் இடம்பெறும் புத்தகப் பட்டியலின் இடத்தை நாவல்—அதிலும் எட்டணு நாவல்களின் பெயர்கள் அதிகம் அடைத்துக் கொண்டிருக்கும் நிலையிலே, 'சில்லறை' நாவல்களுக்குத்தான் இன்று 'சீசன்' என்ற மாருன எண்ணம் மொத்தத்தில் பிரசுரகர்த்தர்கள்—வாசகர்கள் இருவரிடையும் வேரூன்றிவிட்டிருக்கின்றது. இந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில் 'அத்தி பூத்தது மாதிரி' அழகிய சிறுகதைத் தொகுப்புகள் ஒரு சில வெளிவருவதைப் பார்க்கும் போது, உண்மையாக யாவரும் ஆச்சரியப்படத்தான் செய்வார்கள். அத்துடன் வெளியீட்டாளர்களின் துணிச்சலையும், அத்துணிச்சலின் பின்னணியாக அமையும் கலைத்தொண்டினையும் போற்றவும் போற்றுவார்கள்.

'மாயாவி' என்ருல் நீண்ட கதைகள் என்பது அவரது 'டிரேட்மார்க்'. அவர் கதைகளில் உயிர் இருக்கும்; ஓட்டம் இருக்கும்; சம்பவச் சுவையிருக்கும். அவர் எழுதிய பத்துக் கதைகளின் சேர்க்கை 'அகதி'.

ஒரே பாதையில் ஒருமித்திருக்கவேண்டிய தந்தை, மகன், மகள் மூவருமே பிரிந்துபோய்ப் பின் ஒன்றுகூடும் கட்டத்தில் மீண்டும் இணையும் அப்பாதை பின் ஒருவழி அடைக்கப்பட அகதியாகச் சாகும் சப்பா, இந்தச் சமூகத்திற்குப் பலியாகும் தேவகி, தாய்மைப்பாசம் வெற்றி கண்ட தாய் ஸ்தானம் பெற்ற கமலா, வறுமைக்குப் பலியாகித் தன் குழந்தை ஒன்றையே கனவாகக்கொண்டு நாட்களை நழுவவிடும் அந்த உத்தமத்தாய்—பிச்சைக்காரி, விபரீத முடிவுகண்ட விஷக்கன்னி, வனஜாவின் கலைப் பித்தம் தெளிய ஏதுவாயிருந்த பிச்சைக் குழந்தைகள்—இத்தகைய குணச்சித்திரங்கள் 'அகதி'யில் உணர்வூட்டி நிற்கின்றன, உயிர்பெற்று நிற்கின்றன, ஆசிரியர் 'மாயாவி'யின் 'பேணு'வினல்!

அழகிய இலக்கியக் கதைக்கணுக்கள் கொண்டதொரு தித்திக்கும் செங்கரும்பாக 'அகதி'யை ஆக்கித்தந்துள்ள புதுமைப் பிரசுரத்தாரைப் பெரிதும் பாராட்டுகிருேம்!

அகதி: ஆசிரியர்: 'மாயாவி' வெளியிட்டோர்: புதுமைப் பிரசுரம், பெண்ணுடம் (தெ. ஆ. ஜில்லா) விலை ரூ 2—0—0.

★

வளரும் இலக்கியப் பணியின் தரம் உயரச் செய்கிறது 'அகதி'யை அடுத்து இடம்பெறும்

'பூச்சரம்!' 'சுகி' தொடுத்திருக்கும் பூச்சரத்தின் கதைமலர்கள் வண்ணம்பெற்று, வாசம் மிகுந்தொளிருகின்றன.

'சாறும் சக்கையும்' அழகான படைப்பு. பிள்ளைவாள், சொக்கி, செந்தி—இந்த 'முக்கோணநபர்களை' யார்தான் மறக்கமுடியும்? தாபத்தின் நிலையை, நினைவை, நியதியைத் திறம்படக் கையாண்டிருக்கிறார் ஆசிரியர் 'தாபம்'—'மனிதனும் மிருகமும்' என்ற கதைகளில். உள்ளத்தைத் தொடுகிறது 'நல்லபாம்பு'. 'சிருஷ்டிகர்த்தா—'முதல் இரவு' இரண்டும் சுவைச் சித்திரங்கள். 'மனக்குகை' கமலா—செல்லம் 'இருமனத்'தின் படப்பிடிப்பு.

'பூச்சரம்' சுகி அவர்களின் கலைத்திறனுக்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டு; பூக்கடைக்காரர் பழனிப் பிரசுரத்தாருக்கு நல்ல விளம்பரம். ஓஹோ! பூக்கடைக்கு விளம்பரம் எதற்கு என்கிறீர்களா?

பூச்சரம்: ஆசிரியர்: சுகி. வெளியிட்டோர்: பழனி பிரசுரம். மணிக்கூண்டு, புதுக்கோட்டை. விலை ரூ. 1–8–0.

★

திராவிட முன்னேற்றக் கழகம் எதற்காகத் தோன்றியுள்ளது, எப்படிச் செயலாற்றுகிறது, அதன் நிலை என்ன என்பதைப் பற்றிய உள்ளுறையுடன், கண்ணீரிலே தோன்றிய கழகம், செந்நீரிலே வளர்ந்துவரும் வரலாற்றை திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் உணர்ச்சி பொங்க எழிலுறச் சித்தரித்திருக்கிறார், உயிரோவியமான 'கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்' என்ற நூலிலே.

திராவிட முன்னேற்றக் கழகம், அதன் நோக்கம், செயலாற்றும் நெறி, ஆளவந்தார் கையாளும் அடக்குமுறைகள், இழைக்கப்படும் கொடுமைகள், இப்படிப் புத்தகம் பல உட்பகுதிகளாகப் பிரிந்து நம் உணர்வுககு உணர்ச்சி யூட்டுகிறது! உயிரூட்டுகிறது! தேனிக்கலவர நிகழ்ச்சியை—அதன் உண்மை வரலாற்றினை அனைவரும் அறிந்துகொள்ள நல்ல வாய்ப்பு அமைந்துள்ளது புத்தகத்திலே. திராவிட முன்னேற்றக் கழகத்தாரின் லட்சியக் குரல் இந்த நூல். இதன் புரண்டோடும் ஏடுகளில் தோழர் நெடுஞ்செழியனின் துடிப்புக் குரலை—துணிவுக் குரலை—இதய ஒலியை நாம் கேட்கிறோம். இத்தகைய பொன்னான சந்தர்ப்பத்தை நல்கிய ஆசிரியருக்குத் தமிழர்கள் கடமைப்பட்டவர்களேயல்லவா?

கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்: ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன். வெளியீடு: மன்றம் பதிப்பகம், சென்னை 10. விலை ரூ. 0–12–0.

—'பூவை'

★

அமிர்தம் உயரிய சிறுகதைத் தொகுப்பு! அமிர்தம் ஈறுக ஈரைந்து சிறுகதை ஓவியங்கள், அழகிய மூவண்ண

அமைப்போடு விளங்கும் இச் சிறுகதைக் காவியத்தில் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு டெக்னிக், ஒவ்வொரு சுவை எனப் பதிப்புரை கூறுகிறது. ஆனால் இதை அப்படியே ஏற்றுக்கொள்ள மனம் இடந்தரவில்லை. எல்லாக் கதையிலும் ஒரே டெக்னிக், ஒரே சுவைதான் காணப்படுகின்றது. அதாவது எல்லாக் கதைகளும் படிப்பதற்கு இன்பமாக இருக்கின்றன; பன்முறை படித்து மகிழுவதற்குத் தூண்டுகோலாய் அமைந்திருக்கின்றன என்று தான் கூறவேண்டும்.

புத்தகங்கள் படிப்பது பொழுது போக்குவதற்காக மட்டுமல்ல; நமக்குத் தெரியாத அனுபவங்களை நூல்களின் வாயிலாகவும் அறிந்துகொள்ள மிகவும் ஆசைப்படுகிறோம். வாழ்க்கையின் பல கோணல்களைப் பார்க்காவிட்டாலும், படித்தாகிலும் உணரவேண்டுமென்ற உள்ளம் நமக்கு இருக்கிறது. மனித இதயத்தில் இயல்பிலேயே இருந்துவரும் அந்த நச்சு நினைப்பிற்கு நல்ல மருந்தாக நண்பர் ஆறுமுகத்தின் 'அமிர்தம்' அமைந்திருப்பது கண்டு தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர் எவரும் களிப்பெய்துவர் என்பது திண்ணம்.

'பலியா?' என்னும் கதைத் தலைவன் வீரப்பன் காளி கோவிலின் முன் நிற்கும்போது மிரண்ட விழிகளோடு நாமும் ஜனக்கும்பலோடு பிரமை பிடித்து நிற்பதுபோலவே தோன்றுகிறது. வீரப்பனின் மனைவி வடிவழகி துடிக்கிறாள்; நாமும் துடிக்கிறோம். ஆனால் ஆசிரியர் நம்மையெல்லாம் திகைக்கவைத்துக் கதையைச் சுபமாக முடித்துவிடுகிறார்.

'கோதையின் கேள்வி'யைக் கேட்டுக் காவேரி கண்ணீர் விடுகிறாள்; நாமும் கண்ணீர் விடுகிறோம். கொலைகாரன் மாணிக்கம் அவன் மனைவி காவேரியால் மனிதனாக மாறுகிறான்; அன்போடு கோதையை எடுத்து முத்தமிடுகிறான்! என்னே மனிதனின் மனப் பண்பு! ஒரு அடிபட்ட புலியின் வாழ்க்கையில் அமைதி நிலவுவதைக் கண்டு நம் அகம் மகிழ்வால் பூரிப்படைகிறது. யாரோ கோதை—கதையிலே வரும் ஒரு குழந்தை— அதன் கேள்வி நம் ஆழ இதயத்திலே படிந்துவிடுகிறது.

தான் நினைத்த ஆடவனின் கைத்தலம் பற்றுவதற்காக மோகினி மீனா தன் அக்காள் புவனாவை ஊமையாக்கிக் காட்டுகிறாள். குட்டு வெளிப்பட்டதும் பதறுகிறாள். இறுதியில் அந்த மாயாமோகினி நினைத்தபடியே ஆசிரியர் அவளுக்குத் திருமணம் செய்து வைக்கிறார். திருமணம் முடிந்துவிட்டாலும் அந்த 'மோகினி'யை நம்மால் மறக்க முடியவில்லை. நம் அகக் கண்ணில் நிலையாக நின்றுவிடுகிறாள் அந்தச் சுயநலக்காரி!

வீணையில் எழும் நாதம்போல் வாழ்க்கையில் இன்பம் துய்க்கும் சுலோவும் மூர்த்தியும் ஒருவர்க்கொருவர் சந்தேகங் கொள்கின்

றனர். இந்த அன்பு நீடிக்குமா— இது அவர்கள் இருவருக்குமே விளங்காத புதிர்! வீணையை மீட்டும் விரல்கள் அடிக்கடி சோகத்தைத் தூவுகின்றன. மாசில் வீணை அவர்கள் மன யாழிலே மாசுநிறை கீதம் இசைத்தது. தந்தியை அறுக்கச் சென்ற மூர்த்தி, ஏற்கனவே ஒரு தந்தியைச் சுலோ அறுத்தெறிந் திருப்பதைக் காணுகின்ருன். அறுந்த தந்தியால் பிரிந்த உள்ளங்களையும் ஆசிரியர் ஒன்று சேர்த்து விடுகிருர். குறிப்பாக ஒரே ஒரு குறைதான் இக் கதையில் தோன்றுகிறது. இக் கதையை மட்டும் எத்தனைமுறை எந்த மன நிலையில் படித்தாலும் தெவிட்டவே இல்லை. தேனில் நனைத்தெடுத்த பலாச்சுளைபோல் ஒரே தித்திப்பாக இருக்கிறது.

ஆயினும் எல்லாக் கதைகளுக்கும் சிகரம் அமைத்தாற் போன்று பிள்ளைக் கனியமுது என்னும் கதையில் ஆசிரியர் தம் உள்ளுணர்வுகளை யெல்லாம் தீந்தமிழ்ச் சொற்களாக வடித்து வழங்கியுள்ளார். தன் குழந்தையின் நலனுக்காக இரண்டாவது முறை மணஞ்செய்யத் துணிந்த டாக்டர் சுந்தரம், அது இறந்த சேதியறிந்து புழுப்போலத் துடிக்கிருர்; அழுகிருர்; அலறுகிருர். நம் மனம் முழுதும் சோகம் நிரம்பிவிடுகிறது. படிப்போர் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே ஒரு டாக்டர் சுந்தரமாகப் பாவித்துக் கொள்வார்கள் என்ருல் நாம் ஆச்சரியப் படுவதற் கில்லை. நண்பர் ஆறுமுகத்திற்கும் அழகுப் பதிப்பகத்தாருக்கும் இந்நூல் நல்ல வெற்றி என்று கூற விரும்புகிருேம்.

அமிர்தம். ஆசிரியர்: எஸ். ஆறுமுகம். வெளியிட்டோர்: அழகுப் பதிப்பகம், 35, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, மவுண்ட் ரோடு, சென்னை. விலை ரூ.1-0-0.

—நாஞ

முன்பணம் கட்டக்கூடிய விருந்து விற்பனையாளர்கள்

தேவை

பொள்ளாச்சி	பாலக்காடு
ஜலகண்டபுரம்	கொட்டாம்பட்டி
காரைக்கால்	ஸ்ரீவில்லிபுத்தூர்
கரூர்	உசிலம்பட்டி
கோவில்பட்டி	விருதுநகர்
மேட்டுப்பாளையம்	தேனி
செங்கற்பட்டு	திண்டுக்கல்

குழந்தை இன்பம்

முடியரசன்

"பாய்ந்தோடும் அருவியலைப் பக்க மெல்லாம்
பல்வண்ணப் பூக்களிலே மென்மைத் தென்றல்
தோய்ந்தோடி வந்துடலில் வருடும் போது
சொல்லரிய இன்பமன்றோ? அருமை அத்தான்!
ஆய்ந்தெடுத்த யாழெடுத்துப் பாடு கின்றேன்
அருகினிலே வாரும், அதோ பாரும் வானில்
வாய்ந்தொளிரும் வெண்ணிலவு! இன்பம்! இன்பம்!
வரம்புண்டோ?" என்றுரைத்தாள் துணைவி நல்லாள்.

"வெண்முகில்சூழ் மலைமுகடும் முகட்டி னின்று
வீழ்ந்ததிரும் அருவிகளும் வண்ணப் பூவால்
கண்கவரும் செடிகொடியும் கொடிகள் தாவிக்
கட்டுகின்ற மரத்தொகையும் தென்றல் காவில்
பண்சொல்லும் வண்டுகளும் மாலை வானில்
படர்கின்ற செந்நிறமும் காதல் நங்காய்!
விண்மதியும் தருமின்பம் என்றன் பிள்ளை
விளையாடும் காட்சிதரும் இன்பம் ஆமோ?

"ஆய்ந்தெடுத்த இசைவல்லார் செய்த வீணை
ஆர்த்தெழுப்பும் இன்னொலியும் கானில் நன்கு
காய்ந்திருக்கும் வேய்ங்குழலில் தோன்றும் பண்ணும்
கடும்பாம்பும் மெய்ம்மறந்து நிற்க இன்பம்
தோய்ந்திருக்கும் படிஊதும் குழலும் இன்னும்
துன்பமெலாம் துடைக்குமிசைக் கருவி யாவும்
பாய்ந்தளிக்கும் இன்பமெலாம் என்றன் பிள்ளை
பரிந்துமிழும் மழலைதரும் இன்பம் ஆமோ?"

"அப்படித்தான் சொல்லிடுவீர்! மாடி மீதில்
அன்றொருநாள் குறுந்தொகைப்பாட் டொன்று சொல்லி
ஒப்புண்டோ இதற்கென்றீர்? அதனை டென்னை
உவமித்துக் கேலிசெய்தீர்! 'உண்ண வாரும்
எப்பொழுதும் இதுதானா?' என்றால் 'நூலில்
எழும்சுவையால் சுவையுணவை மறந்தேன்' என்பீர்!
எப்பொழுதே னும்விளக்கை அணைக்க வந்தால்
இருஇரு நூல் இன்பம்மேல் என்றீர் அத்தான்!"

"நானூற்றுப் புறப்பாடல் சொல்லு கின்ற
நம்முன்னோர் செய்தபெரும் வீரப் போரும்
தேனூற்றே எனக்கருதும் அகநா னூறு
செய்யகுறுந் தொகைகூறும் காதல் வாழ்வும்
கால்நூற்றே டைந்தாண்டின் அகவை யில்நான்
கண்டசில காவியமும் தந்த இன்பம்
மானேட்டும் விழியுடைய கண்ணே! என்றன்
மகவுதரும் இன்பத்திற் கீடே யில்லை."

"போகட்டும்; இசைபாடி அணையின் மீது
புகழ்ந்தீரே நானின்பம் தந்த போது!
வேகட்டும் உணவென்றால் சேலை பற்றி
விளையாடிப் பெற்றீரே அந்த இன்பம்!
வேகத்தோ டென்னுதடு சுவைக்கும் போது
விளைந்தசுகம் எப்படியோ? சொல்வீர்!" என்றாள்.
"ஆகட்டும்" என்றுசொல்லி அவள்கை பற்றி
அருகிருத்தி "உயிர்க்கொழுந்தே! மஞ்சம் ஏறி

நரம்பேறும் யாழ்மீட்டிக் காதல் கூட்டி
நல்லிசையால் மகிழ்வூட்டி இருக்கும் போதும்
வரங்கேட்ட என்விருப்பம் வாய்க்கா தாகி
வாட்டமுற்ற எனையுன்கண் தேற்றும்போதும்
சுரந்தூறும் உன்இதழைச் சுவைக்கும் போதும்
சொல்லரிய இன்பத்தைக் காணு கின்றேன்
இருந்தாலும் என்குழந்தை மெய்யில் தாவி
இருகையால் தொடுகின்ற இன்பம் ஆமோ?"

என்றுரைத்தேன்; "போங்களத்தான்!" என்று சொல்லி
எழுந்தோடி ஓர்புறத்தே ஊடி நின்றாள்.
சென்றழைத்தேன் திரும்பாமல் 'ஊஹூம்' என்றாள்.
"செவ்விதழாய்! எதற்கிந்தக் கோபம்?" என்றேன்
"நன்று! நன்று! தாழ்வென்றீர், என்னின் பத்தை!
நானெதற்காம்?" எனப்புலந்தாள்; முகத்தைத் தொட்டேன்
கன்றியகண் நீர்சிந்தப் பதறி விட்டேன்
கதறியழும் மகவொலியால் விழித்துக் கொண்டேன்.

நமக்குள்ளே

சுகி

7

என் வீட்டுக்கு வந்த பிரசுரகர்த்தர், "தாங்கள் ஒரு ரூபாய், அல்லது அரை ரூபாய் விலையில் ஒரு நாவல் எழுதிக்கொடுக்க முடியுமா?" என்று கேட்டார். நான் என்ன பதில் சொன்னேன் என்பது இருக்கட்டும். தோட்டக்காரன் ஒருவனிடம் போய், "அப்பனே முக்காலணாவுக்கு இரண்டு காய்கள் வரும்படியாக வாழைக்காய்களும், இரண்டணாவுக்கு மூன்று வீதம் விற்கும்படியான புடலங்காய்களும் விளைவித்துத் தர முடியுமா?" என்று கேட்டால்...கேட்கமாட்டீர்கள்......குடியானவன் சிரிப்பான். விளைவின் மகசூல் எப்படி இருக்கிறதோ அதற்குப் பின்புதான் விலை. ஆனால் இலக்கிய உலகில் விலைக்குத் தகுந்த மாதிரிதான் சிருஷ்டி செய்தல் வேண்டுமா? கற்பனையும், கதையின் சுவாரஸ்யமும் அதிகமாய்ப் போனால் கோழிக் குஞ்சின் கழுத்தைத் திருகிவிடுகிற மாதிரி திருகிவிடவேண்டும். இது இன்றைய நூல் வளர்ச்சியின் தன்மையைக் காட்டுகிறது.

* * *

முன்னாள் இலக்கியம் பெரும்பாலும் ஆண்மையின் வீரத்தையும், பெண்ணின் பெருமையையும் காட்டிற்று. இந்த நாளில் ஆண்மையின் வீழ்ச்சியையும் பெண்ணின் சாகசத்தையும் காட்டுகிறது.

* * *

நேரப்போக்குக்காகப் பிறந்த கதை இன்று உலகை என்ன பாடுபடுத்துகிறது? எத்தனையாயிரம் ரூபாய்கள் கதைக்காகச் செலவிடப்படுகின்றன! வெளிவருவனவெல்லாம் உயரிய கதைகள் என்று சொல்லக் கூடுமா? மற்றவர்கள் எப்படி நினைத்தாலும் எழுதுகிறவன் தன் கதைகளைப் பற்றி உயர்வாக எண்ணிவிட்டால் கதை எழுத முடியாது. 'சிறுகதை வள்ளுவர்' என்று சிறப்பித்துக் கூறக்கூடிய 'புதுமைப்பித்தன்' கூடத் தன்னுடைய கதைகள் எல்லாம் உயர்வாக இருப்பதாக 'என் கதைகளும் நானும்' என்ற கட்டுரையில் சொல்கிறார். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பது எழுத்தாளர்கள் விஷயத்தில் பொருந்தும். மோசமான ஒரு கதையைக் குறித்தால், அதில் ஒரு தனி நயம் இருப்பதாக வாதாடுவார்கள். இந்த பலவீனம் எல்லோருக்கும் பொதுவுடைமை என்று சொல்லலாம். எல்லோரும் இந்நாட்டு மன்னர்களோ என்னவோ இந்நாட்டு எழுத்தாளர்கள் மன்னர்கள் என்று சொன்னால் ஆச்சரியப்படவேண்டாம்.

* * *

நாடு, மொழி, தொழில், சமூகம் பற்றித் தாங்கள் நினைப்பதைச்

சொல்லக் கூடிய உரிமை—நினைத்த படி சொல்லும் உரிமை நம்மில் பலருக்கும் இல்லை.

*   *   *

எனக்குப் பேப்பர் போடுகிற பையன் நேற்று ஒரு தினுசாக நடந்து வந்தான். நெஞ்சு நிமிர்ந்து நடையில் மிடுக்கு இருந்தது. என்ன காரணம் தெரியுமா? அவனும் ஒரு சகோதரன் ஆகி விட்டான். அவன் எழுதிய கதை வந்துவிட்டது. தமிழ் நாட்டில் இப்படி எழுதுகிறவர்கள் இனியாவது முன்னுக்கு வர வேண்டும். மேலை நாட்டில் பேராசிரியர்கள், பிரமுகர்கள், மந்திரிகள் கூடப் பேப்பர் விற்று, முன்னுக்கு வந்தவர்களில் பலர் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இந்நிலை நிகழுமென்று சொல்லக்கூடிய தைரியம் யாருக்கும் இருக்கிறதா? தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தாழ்வு மனப்பான்மை எப்பொழுதும் அதிகம். தன்னம்பிக்கை குறைவு. பொய்யாமொழிப் புலவர் சிறந்த புலவர் குழாத்தில் சேரக்கூடியவர். அவருக்கும் இந்தத் தன்னம்பிக்கை மிகக் குறைவு என்பதை இப்பாட்டு சான்றாகக் காட்டுகிறது.

> அறமுரைத் தானும் புலவன், முப்பாலின்
> திறமுரைத்தானும் புலவன், குறுமுனி
> தானும் புலவன்! தரணி பொறுக்குமோ?
> யானும் புலவனெனில் ?

வள்ளுவர், அகத்தியன் இவர்களோடு தன்னைப் புலவன் என்று சொல்லிக்கொள்ளப் ‘பொய்யாமொழி’ அஞ்சுகிறார். இந்த அவையடக்கப் பிரலாபத்தைப் பேச்சு மேடைகளில் நிறையக் கேட்கலாம். தன்னைத் தாழ்த்திக்கொள்ள வேண்டிய இடங்கள் இன்னின்ன இடங்கள் என்று கூட இலக்கணம் செய்திருக்கிறார்கள். காலம் மாறுபட்டு வருகிற போது சம்பிரதாயங்களும் மாறுபட்டுத்தானே ஆக வேண்டும். நேற்று வரை வெறும் பேப்பர் போடும் பையன் இன்று சோதர எழுத்தாளராக மாறி விட்டது போல் எத்தனை பேர் மாறப்போகிறார்களோ? மாறிக் கொண்டிருக்கிறார்களோ?

*   *   *

கற்றோர், தவத்தோர், கீழ் மக்கள், வறியோர் யாவருக்கும் எவ்வூரும் தம்மூர் ஆகும். மற்றோர்க்குத்தாம் தம்மூர் என்று தனியூர் உண்டு.

*   *   *

யார் எழுத்தாளன் என்பதற்கு இலக்கணம் இருக்கிறதா? இல்லாதவரை சௌகரியம் என்ற நினைப்பில்தான் நான் எழுதத் தொடங்கினேன். நீதிமன்றத்



கழுத்தைத்திருகுகிற மாதிரி

தில் வழக்காட, நோயாளிமேல் கை வைக்கச் சர்க்கார் சிலருக்கு, பட்டம் படிப்பு உள்ளவருக்கே உரிமை தருகிறது. இது போல் இன்னார்தான் எழுதலாம் என்று யார் சொல்லக் கூடும்? சொல்லும்படியான நிலை எந்த நாட்டிலும் இதுவரை வரவில்லை. இலக்கணம் என்பது கல்வியறிவினால் மட்டும் வருகிற காரியமில்லை. கல்விக்குட்பட்டது அறிவு வளர்ச்சி. அனுபவம், மேதை என்ற காரணங்களுக்குள் கட்டுப்பட்டது கலைபடு தொழில்கள். சர்க்காரில் பட்டம் பெற்ற சங்கீத வித்வான் சங்கீதமே மேல் என்று நாம் வாதாடினால் அங்கே ரஸனை இல்லை. கலை வேறு, பாண்டித்தியம் வேறு. கற்றவர்கள் கலைஞர்களாக இருக்கவும் செய்யலாம் இல்லாமலும் போகலாம். கல்லாதவனைப் படிப்பற்றவன் என்று தள்ளிவிடுகிற மாதிரி கலை உலகத்திலிருந்து தள்ளிவிட முடியாது. பட்டம் பெறாதவரும் மந்திரியாக வர முடியும். அப்படிப்பட்டதுதான் கலை உலகம். பட்டம் பெறாதவன் அரசாங்கக் குமாஸ்தாவாக வரமுடியாது. ஆனால் மந்திரியாக வரலாம். அதைவிடப் பெரிதான நிலையான காரியம், அவன் கலைஞனாக வரலாம்.

* * *

மந்திரிக்கழகு வரும்பொருள் உரைத்தல்! இது பழய பாடல்—இந்நாளில் மந்திரிக்கழகு கலைக்கண் இருத்தல்—புதியபாடம்.

[அவனும் ஒரு...எழுத்தாளன் ஆகிவிட்டான்

சாதாரணமனிதன், பிரமுகன், மந்திரி இப்படி எந்த இனத்திலிருந்தும் எழுத்தாளன் பிறக்கக்கூடியவன் என்றே நான் நினைக்கிறேன். எனது சகோதர எழுத்தாளர் "எங்கு தரித்திரம் தாண்டவமாடக் கூடியதோ, தாண்டவமாட வேண்டுமோ அங்கு கலை இருக்க வேண்டும்; எப்போது காசு சேருகிறதோ அந்த விநாடி முதல் கலையை மறந்துவிட்டு வேறு தொழில் புரிய வேண்டும்!" என்று சொல்லுவார். இவர் இலக்கணம் இருக்கட்டும். "சீலன்" சொல்லுகிறார்:

அவன் உருவம்:

அழுத்தமிகு திருக்குறளின் உருவம் கொண்டான்
அலம்பாத நிறைகுடம்போல் அமைதி கொண்டான்.

அவன் செயல்:

சுதந்திரத்தை விற்றுண்டு சுகிக்க மாட்டான்
மல்லுக்குச் சொற்கச்சை வரிந்திறுக்கி மார்பு
மதமதத்து வெறுஞ்செருக்கில் மாய்தல் வேண்டான்
கல்லுக்குங் கடியமனக் காரர் தம்மின்
கருத்தமெழு கெனவுருக் கவிதை செய்வான்.

லட்சத்திற்கு அதிகமான குத் தீட்டிகளைவிட மூன்று பத்திரிகை களைக்கண்டு நான் பயப்படுகிறேன்

—நெப்போலியன்.

* * *

நெப்போலியன் போன்ற ராஜ தந்திரிகள், தளபதிகள் பயப் படுகிற அளவுக்கு நம் போன்ற சாதாரண மனிதர்கள் இல்லை. நீங்கள் எப்படியோ, நான் அவ் வளவு பயப்படவேண்டியதில்லை. தினப்பத்திரிகைகளுடைய சக்தி நமக்குத் தெரியும். அணுக்குண்டு செய்ய முடியாத காரியத்தை ஒரு அரசாங்கத்திற்கு அது செய்து தரும். தொகுதியாகப் பார்த்தால் அதன் வலு அதிகம். தனி மனிதனுக்கு என்று பார் வையிட்டால் அதன் வலு கேலிக்கு இடமாகவிருக்கிறது. தினப் பத்திரிகை என்பது என்ன? நாளைக்கு டிபன் கட்ட இன்று கொண்டு தரும் சுருள் பொருள், நாளை மறுநாள் அடுப் புப் பற்றவைக்க இரண்டு நாள் முன்னதாகவருகிற எரிபொருள், சில தினங்களில் நகரசுத்திக்கார ருக்கு வேலை தேடித்தரும் ஸ்தா பனம்—இவ்வாறு சொல்லலாம். இது நேர்மையாகாது. ஒரு பொருளின் பயன் எதுவோ அதைத்தான் சொல்ல வேண்டும் அதற்கு அப்பால் உபயோகம் செய்வதுகடாமாட்டில் உழக்குப் பால் இல்லை; யானையிருந்து பயன் என்ன, மணிக்கு நூறு மைல் பறக்க முடியுமா? பூனை யிலிருந்து ரேஷன் பொருள்கள் பெற இயலுமா? இப்படிக் கேட்பது எவ்வளவு அசம்பா விதமோ அப்படித்தான் அன் றாடப் பத்திரிகைக்கு ஆயுள் நிர் ணயம் செய்து மதிப்பிடுவது. இவ்வளவு அற்ப ஆயுள் உள்ள பொருளுக்கு எவ்வளவு வலு என்று திகைப்பதோடு நின்று விட்டால்...?

* * *

ஒருவன் எப்படி வாழ்ந்தான் என்பதுதான் முக்கியம், எத்தனை வருஷம் வாழ்ந்தான் என்பது முக் கியமல்ல. ஒரு பொருள் எவ்வளவு சக்தியுடையது என்பதுதான் கவ னிக்கவேண்டியது. அதைப் பகுத் தால் வெங்காயத்திற்குத் தோல் உரித்த கதையே.

* * *

தூக்கத்தைப்பற்றி அமெரிக் காவில் நடக்கிற ஆராய்ச்சிகளைப் பார்த்தால் கேட்கக் கேட்க ஆச் சரியமாக இருக்கிறது. இரவு நேரத்தில் ஒரு மட்டாகத் தூங்கு வதை விட, மூன்று மணி நேரம் தூங்கி, வேலை பார்த்துவிட்டு, பின்னர் மூன்று மணி நேரம் தூங்குவதனால், அதிக ஓய்வும் உற்சாகமும் பிறக்கிறது என்று ஒருவர் கண்டுபிடித்துச் சொல்லு கிறார். தற்காலத்தில் மில்களில் ஷிப்டு முறை இருக்கிறமாதிரி நமது தூக்கத்தையும் இரு பகுதி களாகப் பிரிக்கிறார். அதிக வேலை செய்யமுடியுமென்றும் குறைந்த நேரத்தில் தெளிவாகவும் பிறர் தொல்லையின்றியும் செய்யக் கூடிய வேலைகளைச் செய்பவ ருக்கு இதை உபதேசம் செய் கிறார். நான் செய்து பார்த்ததில் தூக்கத்தினால் அடையும் இன் பம் இரு மடங்கு பெருகிற்றே

தவிர வேலை செய்யும் திறமை எனக்கு வரவில்லை. நீங்கள் முயன்றால் உங்களுக்கு அதிர்ஷ்டம் இருக்கலாம்.

* * *

தூக்கம் சிலருடைய பேச்சுக்கும் பிரசங்கத்திற்கும், ஒரு சிலருடைய குறட்டைக்கும் இயற்கை அருளிய வரப்பிரசாதம்.

* * *

தூக்கத்திற்கு எதிரிகள் குழந்தைகள், பெண்கள், யந்திரங்கள், திருடர்கள், இரவில் ரோந்து சுற்றும் போலீஸ்காரர்கள், தெரு நாய்கள், இரவு ரயிலுக்குப் போகும் பிரயாணிகள். இவர்கள் மத்தியிலும் தூங்கும் மேன் மக்கள் உளர். எனக்குச் சிறு சப்தம் கேட்டாலும் விழிப்பு வந்துவிடும். முக்கியமாகக் குறட்டை விடுகிறவர்கள் தூங்குமிடத்தில் படுத்தாலே எனக்குச் சிம்ம சொப்பனம். தூக்கத்தை ஆராய்ச்சி செய்கிற மேல்நாட்டில் புருஷன் மனைவியர் குறட்டை காரணமாக விவாகரத்துச் செய்துகொள்கிறார்கள். குறட்டை நம்மில் சிலர் தூக்கத்திற்குத் தானே எமனாக இருந்து வருகிறது. காலப் போக்கில் அது சிலரது வாழ்க்கைக்கும் தாம்பத்ய உறவுக்கும் எமனாக வந்தால் நாம் ஆச்சரியப்படவேண்டாம். தற்கால நிலையில் உரிமை உணர்ச்சி வளர்கிற வேகத்தைப் பார்த்தால் பிரிவினை தான் விரும்பப்படுகிறதோ என்று பயப்படவேண்டியதாகிறது. எத்தகைய வளர்ச்சியும் முதலில் நன்மைக்காகக் கைகொடுத்தும் பின்னர்த் தீமையாகமாறுகிறதோ அல்லது அறிவாளிகள் மாற்றுகிறார்களோ, இவை எனக்குத் தெரியாது. இன்று இந்தியன் பீனல் கோடு வளர்ச்சியடைந்திருக்கிறது என்றால் அது மனிதன் நாகரிக வளர்ச்சியைக் காட்டுகிறதா? அல்லது அவ்விடமுள்ள மிருக உணர்ச்சியைக் காட்டுகிறதா? இது வாதத்திற்குரிய விஷயம்.

* * *

லக்ஷக் கணக்கில் பணம் செலவு செய்துகுஸ்தி போட்டுச்சர்க்காரின் தயவை நாடிப் பெரிய ஆஸ்பத்திரி கட்டும் முனிஸிபாலிடி காசநோய் பரவாத வண்ணம் ரோடுகளில் தண்ணீர் மட்டும் தெளிக்க முன் வருவதில்லை. ஆஸ்பத்திரியின் வளர்ச்சியில் கண்ணுள்ளவர்கள் தண்ணீர் தெளிப்பது தவறு.

* * *

சில மாதங்களுக்கு முன் சிறுகதை எழுத்தாளர் 'இளமைப்பித்தன்' "நீங்கள் ஏன் சுண்ணும்புபற்றி எழுதவில்லை?" என்றார். சுண்ணும்பு என் கை பட்டும் சமயத்தில் கண்ணில் பட்டும், வாய்பட்டும் என் பேனாவுக்குத் தப்பிவிட்டது. திடீரென்று என் திறமை தான் இருப்பதை நினைவூட்டியது. நான் எதைப் பற்றி எல்லாம் எழுதியிருக்கிறேன்? அரசியல் முதல் அரசமரம் வரை, கவிதையிலிருந்து காக்காய் முடிய, ஓவியப் பெருமை முதல் ஒணான் நிற மாற்றம் வரை எழுதியிருக்கிற நினைப்பு வந்தது. எதையும்பற்றி இரண்டு பக்கம் எழுதக்கூடும் என்ற தைரியம் இருக்கிறது.

தூக்கத்திலே வருகின்ற இன்பம்...

உழைத்து எழுதக்கூடிய எழுத்தாளர்கள் எதையும் விட மாட்டார்கள். உதாரணமாக மிக வும் கடின காரியமான என்னைப் பற்றிக்கூட நான் எழுதியவன். நான் எழுதிய விஷயங்கள் எல் லாம்—கலைஞர்கள் யாவருக்கும் பொருந்தக்கூடியதே—நான் விரும்புகிற காரியம் என நினைக் காதீர்கள். கதைகளில் மோட் டார் ஏற்றியும் விஷம் கொடுத் தும் பலரைக் கொன்றவனே. வாழ்க்கையில் அப்படியன்று என்பது வெள்ளிடைமலை.

இந்நாளில் சுய சரிதபாணிக்கு ஒரு மௌஸ். பிற மனிதனின் கலைத் திறமையை அறிவதை விட, அவன் விவகாரங்களை, விளை யாடல்களை, உரிமைகளை, உடமை களை அறிய மக்களுக்கு ஆசை. முன்னாளில் பாக்களிலும் சிற்பங் களிலும் 'முத்திரை' கிடை யாது. இன்னார் என்றே தெரி யாதபடி உருவாகின. இப் போது ஒவ்வொரு குற்றத்துக் கும் குணத்திற்கும் ஆசிரியர் யார் என்று உலகமும் எதிர்பார்க் கிறது. இயற்றுபவனும் தெரி விக்க ஆசைப்படுகிறான். புத்த கத் தலைப்பை விட, எழுதியவர் பெயர் பெரிதாக இருக்கிறது. ஏனோ இந்த மாற்றங்கள்?

* * *

மாறுதல்கள் நல்லதோ கெட் டதோ அவை நடைபெற்ற வண் ணம் இருக்கின்றன. இந்நாளில் எந்த மாறுதலிலும் நன்மையுள்ளது என்று எதிர்பார்க்கிறார்கள்.

* * *

எழுத்தின் ரகசியங்களையும், அதன் விளம்பரங்களையும் அதி கப்படியாகவே பேசிவிட்டேன்.

வாழ்க்கைத் தோட்டத்தில் அன்றாடம் வாடி விழக்கூடிய செயல், சிந்தனை என்னும் பூக்களை வாடி விழுமுன்னதாக அதைச் சூட்டிக் காட்டி ஆனந்தப்படுத்தி விடவேண்டுமென்பதே எனது ஆவல். இந்நாளில் ஒவ்வொரு வரும் ஒவ்வொருவரையும் அவர் கள் விரும்பாத காரியங்களைச் செய்யும்படி வற்புறுத்துகிறார் கள் என்பது உண்மையாக இருக் கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை நான் விரும்பு வதைச் செய்கிறேன். இது நமக்குள்ளே இருக்கட்டும்.

* * *

ரகஸ்யம் பரவவேண்டுமானால், மெதுவாக ஒருவரிடம் சொல்லிப் பிறருக்குச் சொல்லவேண்டா மென்று கேட்டுக்கொள்ளுங்கள்.

6. துக்கச் செய்தி!

ஓரே...அலறல் வீரிட்டுக் கிளம்பியது! அத்துடன் "ஹூஹ் ஹூ!..." என்ற மகாக் குரூரமான கர்ஜனையும் கிடுகிடுத்தது! நாகமல்லி வனத்தையே நடுக்கிய அந்த அலறலையும், கோரமான கர்ஜனையையும் கேட்டு எல்லோரும் நடுநடுங்கினார்கள்!

மறுவினாடி, ராஜசிம்மன், ராணி, மகமேரு எல்லோரும் கூடாரத்தைவிட்டு வெளியே பாய்ந்தோடி வந்து பார்த்தார்கள்.

கூடாரங்களுக்குச் சுமார் இருபதடி தூரத்திலுள்ள மணல் மேட்டின் அடியில்—ராஜசிம்மனைச் சேர்ந்த ஒரு வீரன், நிராயுத பாணியாக, ஒரு பயங்கரப் புலியுடன் வீரப் போர் புரிந்து கொண்டிருந்தான்! அந்த வீரனின் முகம், கழுத்து, தோள்பட்டை எல்லாம் ஒரே ரத்தம்!

ராஜசிம்மனுக்கு உடல் பதைத்தது! உயிர் துடித்தது! அவன் அருகில் நின்ற ஒரு வீரனின் வேலை வாங்கினான். பலங்கொண்ட வரைக்கும் ஓங்கினான்.

வேல் பாய்ந்தது! வீரனின் கழுத்தைக் கவ்விக் கொதறவிருந்த புலியின் நெஞ்சிலே சர்ரென்று புதைந்தது! புலி வீழ்ந்து துடித்து இறந்தது!

ராஜசிம்மன், ராணியைத் தன் குதிரையின் மீது ஏற்றிக்கொண்டான். அவர்களுக்கு முன்னும் பின்னும் சாரைசாரையாக யானை வீரர்களும், குதிரை வீரர்களும் சென்றார்கள். ராஜசிம்மன் தான் வேட்டைக்கு சென்றபோது நடந்த பல அதிசய விஷயங்களை எல்லாம் ராணிக்குக் கதை கதையாய்ச் சொல்லிக்கொண்டே போனான்.

ராணி கதிகலக்கும் காட்டுக் கதைகளைக் கேட்டு அதிசயித்துப் போனாள்!

ஒரு நாள் கழிந்தது!

ராஜசிம்மன், பரிவாரங்களுடன் அரண்மனைக்குள் நுழைந்தான். அரண்மனைக் காவலாளர்களெல்லாம் அவனைக் கண்டு கதறிக்கதறி அழ ஆரம்பித்தார்கள். ராஜசிம்மனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் கையைப் பிடித்துக்கொண்டு அவன் கூட வந்த ராணிக்கும் ஒன்றும் விளங்கவில்லை. அவர்களுக்குப் பின்னால் வேலும் கையுமாய் மார்பை நிமிர்த்திக்கொண்டு வந்த மகமேருவுக்கும், அவனுக்கும் பின்னால் வந்த வீரர்களுக்கும் ஒன்றும் தெரியவில்லை.

எல்லோரும் விழித்தார்கள்!

"ராஜசிம்மா!" என்று கதறி அழுது கொண்டே மந்திரி நாகநாதன் ஓடோடியும் வந்தார். ராஜசிம்மனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு குழந்தையைப் போல விசித்து விசித்து அழுதார்!

ராஜசிம்மனுக்கு நெஞ்சைப் பிழிந்தது! அவன் மந்திரியின் அணைப்பிலிருந்து விலகி நின்றான். மந்திரியைப் பார்த்து "அமைச்சரே! என்ன சேதி?" என்று பதறினான்!

"ம்...ம்...சக்ரவர்த்தி..."

"ஹா! என்ன என் தந்தைக்கு?" என்று கத்திக் கொண்டே அரண்மனை மேல் மாடியை நோக்கி அம்பாய்ப் பறந்தான் ராஜசிம்மன். ராணியும் அவன் பின்னாலேயே ஓடினாள்.

ராஜசிம்மன் தன் தந்தையின் படுக்கை அறைக்குள் நுழைந்ததும் பார்த்தான். தங்கக் கட்டிலிலே ராஜசிம்மனின் தந்தை பட்டுப் பீதாம்பரத்தால் மறைக்கப்பட்டு நீட்டி விறைத்துக் கொண்டிருந்தார். பாதி திறந்தும் திறவாமலும் இருந்த அவர் கண்ணின் மணிகளில் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன!

"தந்தையே!" என்று கத்திக் கதறிக்கொண்டே பிணமாய்க் கிடந்த தன் தந்தையின் மீது விழுந்து தேம்பித் தேம்பி அழுதான் இளவரசன் ராஜசிம்மன்.

அப்புறம்—தந்தை அரண்மனைப் பூங்காவனத்தில் அடக்கம் செய்யப்பட்டார். சில மாதங்கள் கழித்து ராஜசிம்மனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டப் பெற்றது.

காலம் உருண்டு கொண்டே இருந்தது. ஒரு வருஷம் புதைந்து போயிற்று. அதிகார வெறி பிடித்த மந்திரி நாகநாதனின் துர்ப்போதனையால் இளவரசன் ராஜசிம்மன் அன்பு கெட்டவனாகிப் போனான்!

பவளபுரியில் பஞ்சம் தலைவிரித்துக் கோரதாண்டவமாடத் தொடங்கியது! பவளபுரி மக்களால் உற்பத்தியாகும் தானியங்களை

வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கொள்ளை லாபம் அடிக்க ஆரம்பித்தார்கள் செல்வந்தார்கள்!

எங்கும் பசி ஒப்பாரி! எங்கும் மரண ஓலம்!

அரண்மனையை நாடி, இளவரசனைத் தேடி முறையிட வந்த நாட்டு மக்களை, இளவரசன் ராஜசிம்மன் அடித்து, உதைத்துச் சித்திரவதை பண்ணினான்! துணிச்சலாய்க் கேட்டவர்களைத் தூக்கி விட்டான்! ஓரே கோரம்! கொடுமை!

மக்களிடையே விழிப்பு உணர்ச்சி ரீங்காரமிட்டது! மக்கள் பசி வெறி பிடித்து எதுவும் செய்யத் துணிந்தார்கள்! மக்களெல்லாம் ஒன்று கூடினார்கள்; பேசினார்கள்; என்னென்னவோ திட்டமிட்டார்கள்! பொதுவாக, நாட்டின் கொடுங்கோல் ஆட்சியை ஒழிக்கச் சபதம் எடுத்துக் கொண்டார்கள்!

இவ் விஷயத்தை அறிந்த இளவரசன் ராஜசிம்மன் துடித்துப் பதைத்தான். வாளைச்சருக்கென்று உருவினான். பளபளவென்று மின்னும் கத்தியைப் பார்த்தான். அது அவனுடைய தந்தையின் போர்வாள்.

"ஏ, போர்வாளே! அந்தப் பசிப் பட்டாளத்தை ருசி பார்க்கும் காலம் வந்து விட்டது உனக்கு!" என்று உறுமினான்!

"ராஜசிம்மா!" என்று அங்கு வந்த ராணி கத்தினாள். கடிவாளம் இழுக்கப்பட்ட குதிரையைப் போலச் சட்டென்று திரும்பிப் பார்த்தான் ராஜசிம்மன். அரண்மனைப் படியின் மீது வீர உணர்ச்சியுடன் கம்பீரமாய் நின்று கொண்டிருந்தாள் புரட்சிக் கவியின் மகளான ராணி!

"என்ன?" என்றான் ராஜசிம்மன் அலட்சியமாக!

"உன் தலையில் பிரகாசிக்கும் மரகத மகுடத்தை இறக்கி வை என்று சொல்லுகிறேன்!" என்றாள் ராணி.

"ராணி! நீயா இப்படிப் பேசுகிறாய்?" என்று கூவினான் ராஜசிம்மன்.

"நான் பேசவில்லை. இந்தப் பவளபுரிப் பஞ்சப் பேயின் பிடியிலே சிக்கிப் பதறும் இந்த நாட்டு மக்களின் வறுமை உள்ளங்கள் குமுறுகின்றன அப்படி!" என்று கத்தினாள் ராணி.

ராஜசிம்மனுக்குக் கோபம் குமுறியது!

"ஏ அனாதைப் பிசாசே! கவிபாடி வயிறுவளர்த்த கவியின் மகளே!" என்று உறுமிக்கொண்டே ராணியை நோக்கி வாளை ஓங்கிக்கொண்டே பாய்ந்தோடி வந்தான், அதிகார மமதை கொண்ட ராஜசிம்மன் ....!

* * *

"உம்...ம்...கிளம்புங்கள். நேரமாயிற்று!" என்று அப்போதுதான் வீட்டிற்குள் புகுந்து அவசரப்படுத்தினார் அப்பா. மாயவன் புத்தகத்தை மூடி வைத்துக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தான். அவன் மனம் 'ராஜசிம்மன் வெட்டி விட்டானா?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டு துடிதுடித்தது!

7. அரைகுறைக் கூத்து!

சாப்பிட்டு முடிந்ததும் எல்லோரும் கூத்துப் பார்க்கப் புறப்பட்டார்கள். கொஞ்ச நேரத்திற்குள் கூத்து நடக்கவிருக்கும் காளி கோவிலுக்கு வந்தார்கள். அங்கே ஒரே கூட்டம்! வேப்பெண்ணெய் வார்த்த தீவர்த்திப் பந்தங்கள் திகுதிகுவென்று எரிந்துகொண்டிருந்தன. மாயவன், அவனுடைய அப்பா, ராஜா, ரஞ்சிதம் எல்லோரும் கூட்டத்தின் ஒரு மூலையில் போய்க்கையோடு கொண்டு வந்த ஓலைப்பாயை விரித்துப்போட்டு உட்கார்ந்தார்கள்.

சிறிது நேரம் வரைக்கும் ஒரே களேபாரமாயிருந்தது.

அப்புறம் கூத்து ஆரம்பமாகியது. முதன் முதலாகக் கோமாளி வந்தான். சிரிக்கச்சிரிக்கப் பாட்டுப் பாடி, கூத்தாடினான். அப்புறம்—வீராதி வீர, மகா சூரப் பிரதாப மார்த்தாண்ட அதிதீர பராக்கிரம பீமராஜா வந்தார். ததிங்கிணதோம் போட்டுக்

கொண்டே கூத்து விறுவிறுப்பாக நடந்து கொண்டிருந்தது.

திடீரென்று, "ஐயோ! தீ! தீ! தீ!" என்று அலறினர் கூத்து மேடையில்

மிருதங்கம் வாசித்துக் கொண்டிருந்தவர். எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். கிராமத்தின் மூலையிலிருந்த ஓரிரண்டு குடிசைகள் சடச்சடவென்று வானமளாவ எரிந்துகொண்டிருந்தன! வானம் சிவப்பு வர்ணம் பூசியதைப் போலப்பளபளத்தது! மறு கணம்...

ஒரே அல்லோகல்லோலம்! "ஆ!...ஊ!..." என்று ஒரே கூச்சல்! கூத்து பார்த்துக் கொண்டிருந்த ஜனங்களெல்லாம் விழுந்தடித்துக்கொண்டு பறந்தோடினார்கள். சிறிது நேரத்தில் தீ அணைக்கப்பட்டது! கிராமத்தில் அமைதி நிலவியது. ஆனால் மறுபடியும் கூத்து நடக்கவில்லை. அன்றைய கூத்து அரைகுறைக் கூத்தாகவே முடிந்தது!

கூட்டம் கலைந்தது. மாயவன், ராஜா, ரஞ்சிதம், அப்பா எல்லோரும் குடிசைக்கு வந்தார்கள்; படுத்துக் கொண்டார்கள். கொஞ்ச நேரம் வரைக்கும் கூத்தைப் பற்றிப் பேசிச் சிரித்து... அப்புறம் தங்களை மறந்து தூங்கிப் போனார்கள். ஆனால், மாயவனுக்கு மட்டும் தூக்கம் வரவில்லை. அவன் புரண்டு புரண்டு படுத்தான். உம்...அவனுக்கு நிலைகொள்ளவில்லை. அவன் விறுட்டென்று எழுந்தான். அகல் விளக்கின் அடியில் போய் உட்கார்ந்தான். கதைப் புத்தகத்தை எடுத்துப் பிரித்து, விட்ட இடத்திலிருந்து படிக்க ஆம்ரபித்தான்.

(தொடரும்)

காதலர்கள்

எஸ். ஆறுமுகம்

அதிகாரிகள் நிறைந்திருந்த அந்தப் பிரேத பூமி மலர்கள் நிறைந்த வயல்போலக் காட்சியளித்தது. பதவிக்குகந்த உடையணிந்திருந்த காவலாளிகள் கல்லறைக்குக் குறுக்கிலும் நெடுக்கிலுமாகப் 'பாரா' கொடுத்து நடந்துகொண்டிருந்தார்கள். கல்லறைகளின் சிலுவைக் கைகள் இருபுறமும் விரிந்திருந்தன. இறந்தவர்கள் மறைந்த உடல்கள்மீது நிறுவப்பட்டிருந்த சிலுவைகள் இரும்பாலும், சலவைக் கல்லாலும், மரத்தினுலும் செய்யப்பட்டிருந்தன.

சற்று முன்தான் படைத் தளபதி விமோசின் மனைவி அடக்கம் செய்யப்பட்டாள். இரண்டு நாள் முன் குளிக்கும்போது அவள் மூழ்கி மாண்டுபோனுள்.

சடங்குகள் முடிந்தன. மதப் பிரார்த்தனை முடிந்தது. அனைவரும் பிரிந்தனர். ஆனுல் தளபதி மாத்திரம் நின்றுகொண்டிருந்தான். அதிகாரிகளும் நின்றுர்கள். தளபதியின் கண்ணுக்கு தனது இளம் மனைவி அடக்கம் செய்யப்பட்டிருந்த பெட்டி புதைக்கப்பட்டிருந்த புதையல் குழியில் பதிந்திருந்தது. அவன் இருமருங்கிலும் நின்றனர் அதிகாரிகள்.

தளபதி அதிகம் மூப்படைந்தவன்; உயரமான மெல்லிய உருவம். வெள்ளை மீசை. அவன் மூன்று ஆண்டுகளுக்குமுன் தன் சக உத்தியோகஸ்தரின் மகளை மணந்துகொண்டான். தந்தையின் சாவுக்குப்பின் அவள் அனுதையானுள்.

படை முதல் தளகர்த்தனுக்கு இரு கைப்பக்கமும் நின்ற இரண்டு அதிகாரிகளும் அவனை அழைத்துச்செல்ல எத்தனித்தார்கள். அவன் தயங்கினுன். கண்கள் இரண்டும் கண்ணீரில் நிறைந்திருந்தன. "இல்லை...... நான் இப்போது வரமாட்டேன். சற்றுப் பொறுங்கள்...நொடிப் பொழுது......" என்று முணுமுணுத்தன அவன் உதடுகள். அவன் அங்கேயே நின்றுன். உள்ளமும் உயிரும் ஒருங்கே மண்ணில் புதைந்துவிட்ட ஆழமற்ற படுகுழி—பாதாளச் சுரங்கத்தின்முன் அவன் மண்டியிட்டான்.

ஜெனரல் ஆர்மண்ட் வந்து தளபதியின் கைகளைப் பற்றியவாறு 'வாருங்கள், இனியும் இங்கு தாமதிப்பது உசிதமல்ல' என்று அழைத்துப்போனுர்.

வீடு சென்று அறைக் கதவுகளைத் திறந்ததும், எழுதும் மேசையில் கடிதம் ஒன்று இருந்ததைப் பார்த்தான் தளபதி. அதைக் கையிலெடுத்ததும், அவனுக்கு அதிசயமும் ஆத்திரமும் அலை மோதின. ஏனென்றுல் அது அவன் மனைவியின் கையெழுத்தாக இருந்தது. மேலும் அக் கடிதத்தில் அன்றையத் தபால் முத்திரையும் இருந்தது.

அவன் கடிதத்தைக் கிழித்துப் படிக்கலானான்.

"தந்தையே,

வழக்கமாக அழைப்பது போலவே தங்களை இப்போதும் 'தந்தையே' என்று அழைக்கிறேன். உங்கள் கையில் இந்த என் கடிதம் சேரும் நேரத்தில், நான் இறந்துபட்டிருப்பேன். அப்போதாகிலும் ஒரு வேளை நீங்கள் என்னை மன்னிக்கமாட்டீர்களா?

தங்களின் இரக்கச் சிந்தைக்கு மன்னிப்பு வேண்டிக் கெஞ்சப்போவதில்லை; என் குற்றத்தை மறைத்துவிட முயலவும் மாட்டேன். இன்னும் ஒரு மணி அளவில் தற்கொலை செய்துகொண்டு சாகப்போகும் ஒரு பெண்ணின் இறுதிப் போராட்டத்தின் உள்ள நிலையிலே நானும் உண்மை பூராவையும் கூறிவிட விழைகிறேன்.

பெருந்தன்மை காரணமாக நீங்கள் என்னைக் கல்யாணம் பண்ணிக்கொண்டீர்கள். நன்றியின் விளைவாக நான் உங்கள் வசம் மனமிழந்தேன். இளம் பெண்ணின் இயத்தோடு நான் உங்களை நேசித்தேன். என் தந்தையிடம் அன்பு சொரிந்ததுபோல தங்களிடமும் அன்பு செலுத்தினேன். அன்று ஓர் தினம் உங்கள் பாதத்தடியில் அமர்ந்திருக்கையில் நீங்கள் என்னை முத்தமிட்டீர்கள். நான் தங்களைத் 'தந்தையே' என்றேன். அக்குரல் என்னவோ என் நெஞ்சின் அடிவாரத்தினின்றும் இரக்க உணர்ச்சி பொங்கிக் குமிழியிட வெளிப் போந்தது. உண்மையில் நீங்கள் எனக்கு ஒரு தந்தையாகவே—ஆம்; தந்தையாகவே இருந்தீர்கள்......நீங்கள் சிரித்துவிட்டு, "அப்படியே நிதமும் என்னைக் கூப்பிடு குழந்தை; நான் அதை விரும்புகிறேன்" என்றீர்கள்.

நாம் இந்நகருக்கு வந்தோம். என்னை மன்னிப்பீர்களா?......நான் ஒருவரைக் காதலித்தேன்......ஆம்; சிந்தனை எடுத்துக் கொண்ட இரண்டு வருட இடைவேளைக்குப்பின்னரே நான் 'காதலுக்கு' உடன்பட்டேன். குற்றவாளியானேன்.........சூறையாடப்பட்ட வனிதையானேன்......!

அந்த மனிதன்......!

உங்களால் ஒருபோதும் அப்பெயரை ஊகிக்கமுடியாது. எனக்கு நன்றாகத் தெரியும். ஏனென்றால் என்னைச் சுற்றி, என்னுடனே டசனுக்கு மேம்பட்ட அதிகாரிகள் சூழ்ந்திருந்தனர்.

'அது யார்?' என்று கண்டு பிடிக்கப் பிரயத்தனம் செய்யாதீர்கள். அவரை நீங்கள் வெறுக்கவும் வெறுக்காதீர்கள். தன் இடத்தில் வேறு ஒருவர் இருந்தால் என்ன செய்வாரோ அதையேதான் அவரும் செய்தார். அவர்

என்னை இதயபூர்வமாகக் காதலித்தார் என்பதை மட்டும் உறுதியுடன் சொல்லிக்கொள்ளுகிறேன்.

கேளுங்கள்......!

ஒரு நாள், இயந்திர சாலைக்கு அண்மையிலுள்ள சிறு திட்டில் நாங்கள் இருவரும் சந்திப்பதாக ஏற்பாடு செய்துகொண்டோம்.

நான் நீந்தி விளையாடுவேன்; அவரோ புதர்கட்குப் பின் அந்திவரை காத்துக் கொண்டிருப்பார் நாங்கள் இருவரும் பிரிந்துபோவதை அந்நியர் கண்டுகொள்ளாதவாறு. புதர்களின்பின் நாங்கள் சந்திக்கும் வேளை...அப்போதுதான் உங்கள் குதிரைக்காரன் பிலிப் அங்கு தோன்றினான். நாங்கள் பொறி கலங்கிப்போனோம். என் அன்பர் சொன்னார்: "நீ ஓடி நீந்தி விளையாடு. நான் இந்த மனிதனைக் கவனித்துக் கொள்கிறேன்."

நான் பிரிந்தேன். நான் அப்படியே நீரில் மூழ்கிவிட்ட மாதிரி உணர்வற்றேன். துடிதுடித்தேன். ஒவ்வொரு கணமும் ஏதோ விபரீதம் நடக்கப்போகிற தென்பதை எதிர்நோக்கினேன்.

ஓய்வு அறைக்கு வெளியே ஒரு மணி கடந்து நான் பிலிப்பைச் சந்தித்தேன். அவன் என்னிடம் தணிந்த குரலில், "அம்மணி, அவரிடம் கொண்டு சேர்க்கக் கடிதங்கள் இருப்பின் தாருங்கள்" என்றான். என் காதலர் அவனைத் தன் வயப்படுத்திவிட்டார் என்பதை நான் அறிந்துகொண்டேன்.

"நான் அவனிடம் ஒரு சில கடிதங்களைக் கொடுத்தனுப்பினேன். அவனே பதில் கடிதங்களையும் கொண்டுவருவான். இப்படி இரண்டு மாதங்கள் ஓடின. நாங்கள் அவனை நம்பினோம், நீங்களும் அவனை நம்பியதுபோல!

பிறகு......!

ஒரு நாள் அதே தீவுக்கு நாங்கள் நீந்தச் சென்றுவிட்டோம். அப்போதும் அங்கு உங்கள் குதிரைக்காரனைச் சந்தித்தேன்; அவன் எனக்காக வெகுநாழி காத்திருந்திருக்கிறான்...! அவன் எண்

ணத்துக்கு நான் இணங்கா விட்டால் எங்கள் இரண்டு பேரையும் உங்களிடம் காட்டிக் கொடுப்பதாக, உங்கள் வசம் எங்கள் தபால்களைக் காட்டிவிடப்போவதாகப் பயங் காட்டினன். ஏனெனில் அவைகளை ஒன்று சேர்த்து அவன் வைத்திருக்க வேண்டும்...

நான் பயந்து நடுங்கினேன்-பயம்! பயங்காளித் தன்மை பூண்ட அற்ப பயம்! எதற்கும் தகுதியற்ற பயப்பிராந்தி! உங்களைப்பற்றிய பயம்! என் மீது அத்யந்த ஆசை வைத்திருக்கும் உங்களை அநியாயமாக வஞ்சித்து விட்டேனே என்ற டயங்கரப் பயம்! அவனைப்பற்றிய பயம்...... தெரிந்தால் குதிரைக்காரனைக் கொன்றுவிடுவீர்களே என்று

என்னைப்பற்றிய பயம்! நான் தளர்ந்தேன். நெஞ்சொடிந்தேன். பெண்புத்தி பின்புத்தியாய்விட்டது...நான் அவனை என் வழிக்குத் திருப்ப நினைத்தேன். அந்த ரகசியம் எங்கிலே......இறுதி முடிவு... அந்தோ...!

நாங்கள்—பெண்கள் பல ஹீனப் புத்தியுடையவர்கள். ஆண்களைக்காட்டிலும் எதற்கும் எளிதில் இணங்கிவிடுபவர்கள். இளகிவிடுபவர்கள். ஆனல்...ஆம்; நீங்கள் இருவர்; மத்தியில் நான்...இச்குழுவில் எப்படியும் யாரோ ஒரு உயிர் இறக்கத்தான் வேண்டும்—இறக்கத்தான் போகிறது... ஆசையால் அந்தச் சாவுக்கு நான் அடிடணிந்தேன்.

பிறகு, நான் நினைத்தமாதிரி நடந்துவிட்டது. எண்ணிய சமயமெல்லாம் உங்கள் குதிரைக்காரன் என்னைப் பயமுறுத்தினன். என் அந்த அன்பரைப் போலத் தினமும் இவனும் என் காதலனனன். ஐயோ! எவ்வளவு அவமானம் ...அது எனக்கு ஒரு பயம் செறிந்த தண்டனை!

'நான் இறக்கத்தான் வேண்டும். உயிருடன் இருந்தால் உங்கள் முன் என் குற்றத்தை ஒருபோதும் ஒப்புக்கொண்டிருக்கவே முடியாது. இறந்துபோனல், நான் எதற்குமே அஞ்சவேண்டியதில்லையல்லவா? நான் சாகத்தான் போகிறேன். இங்கிலேயிலே என்னல் வேறு எதுவும்



செய்ய இயலாது. சாவைத் தவிரவேறுஎதுவுமேஎன்னைத் தூய்மைப்படுத்த முடியாது.

இதோ, சடுதியிலே குளிக்கப்போகின்றேன். மீளவும் திரும்பமாட்டேன்.

உங்கட்குரிய இக் கடிதம் என் அன்பர் மூலம் அனுப்பியிருக்கிறேன். நான் இறந்த பின் அது உங்கள் கைசேரும். பிரேத அடக்கம் முற்றுப் பெற்றதும் நீங்கள் இதைப் பார்ப்பீர்கள்.

போய் வருகிறேன் தந்தையே! இதுதான் உங்கட்கு நான் கூறவேண்டியது. இனி தங்கள் விருப்பம் எதுவோ செய்துகொள்ளுங்கள். என்னை மன்னியுங்கள்...

............"

படைத் தளபதி, நெற்றியிலிருந்து படர்ந்துவந்த தாளாத வேதனையைப் பொறுத்துக் கொள்ள முயன்றான். யுத்த காலங்களில் காண்பித்த அந்த அமைதி அவனை அண்டியது.

தளபதி மணியடித்தான். பணியாள் தோன்றினான்.

"பிலிப்பை என்னிடம் உடனே அனுப்பு!"

அறைக்கதவைப் பாதிதிறந்து வைத்தான். கணத்தில் குதிரைக்காரன், உயர்ந்த வெண்ணிற தாடி உடைய சிப்பாய் பிலிப், தந்திரம் பிரதிபலிக்க விழித்த வண்ணம் தோன்றினான் அங்கே.

தளபதி அவனை வெறிக்க ஊடுருவி நோக்கினான்.

"என் காதலியின் காதலன் பெயர் என்ன?"

"ஐ...யா..."

"துரிதப்படுத்திச் சொல்... சீக்கிரம்..."

"பெ...ய...ர்......காப்டன் செயின்ட் ஆல்பர்ட்..."

அவன் பெயரை உச்சரித்து முடித்தான். அதே மின்வெட்டில் அவன் கண்கள் முன் மின்னொளி ஒன்று பளிச்சிட்டது. அவன் சுருண்டு தரையில் விழுந்தான். துப்பாக்கி ரவை அவன் நெற்றியை மையமிட்டுத் துளைத்துச் சென்றுவிட்டிருந்தது!

[மூலம் : மாப்பஸான்]

எல்லோரும் மனிதர்கள் தாம்! என்றாலும், பழக்கமில்லாதவர்கள்—முன்பின் முகம் தெரியாதவர்கள். கல்யாணம் என்ற சமுதாயம் அங்கீகரிக்கும் சம்பிரதாயச் சடங்கின் மூலம் ஒரு பெண் அடையும் கணவன் எப்படி இருப்பானோ? நல்லவனோ? கெட்டவனோ? அவன் மனம் வெள்ளையோ? கறுப்போ? பழகினதைப் போல் அவ்வளவு தீர்மானமாகக் குணவிசேஷத்தைக் கூற முடியாதே! சாதாரணமாக உலகம் வரம்பு கட்டி வைத்திருப்பது மாதிரி, மாமியார் கொடுமைக்காரியாக — நாத்தனார் பொறுமைக் குணம் படைத்த அரக்கியாக இருந்து விட்டால் புதிய இடத்தின் சூழ்நிலையில் அழுந்த மறுக்கும் இதமான ஒரு பெண்மனம் துகள் துகளாகத் தெறித்து விடும். வாழ்க்கையின் இன்பங்கள் நிர்மூலமாக்கப்பட்டதைப் போன்ற பிரமைதான் மிஞ்சி நிற்கும். இந்தப் பழைய இடத்தின் நினைவுகளை மறக்கடிப்பதுதான் எவ்வளவு கடினம்! கடினமா? மறக்கவே முடியாது! புதிய இடத்தின் ஒவ்வொரு அசைவும் அமைப்பும், பழைய இடத்தின் நினைவுகளைக் கிளறுவதாகவே இருக்கும். காலத்திலும், மனித சமுதாயத்தாலும் அழிக்கப்பட முடியாத கவிஞன் ஒருவனின் நிலைத்த படைப்பான காவியம் போல், பழைய நினைவுகள் மாறாது-மறையாது! அதை மாற்றும் ஒரே மருந்தாகக் காலம் அமையலாம்! ஆனாலும் — சமய சந்தர்ப்பங்

களில் திடீர்த் திடீரென்று பிரவேசிக்கும் பழைய நினைவுகளை ஒரேயடியாக அணைபோட்டுத் தேக்கிவிடும் சக்தி, காலத்திற்குத்தான் ஏது? இத்தனை வருடங்களாகப் பழகிய இந்தப் பழைய இடத்தைப் பற்றிய நினைவுகளின் இனிமையே அலாதி! இப்பொழுது யாவற்றையும் துறந்து முற்றிலும் புதிதான இடத்திற்குச் செல்ல வேண்டும். நாகரிகத்தின் உயிர்த் துடிப்பு நிறைந்த நகர வாசத்திலேயே ஊறிக் கிடந்த ஒருவன், சுத்தப் பட்டிக்காட்டிற்குத் தள்ளப் பட்டு அவஸ்தைப்படுவது மாதிரி!

அவள் கண்களில் நீர் நிறைந்திருந்தது.

ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும் குழந்தையின் நலத்திலே அக்கரை காட்டும் தாய்!— அந்தத் தாயைப் பிரிந்து செல்ல வேண்டும்! எல்லோரையும் எல்லாவற்றையும் துறந்து மறந்து சென்றுவிடலாம். ஆனால் தாயை...? ஐயோ... வேதனை தாங்க முடியாது — தாங்க முடியாதுதான். என்றாலும் பிரிந்துசெல்லத்தான் வேண்டும்! செல்லாமல் இருக்க முடியுமா? தண்டனை பெற்ற கைதி சிறைக்குள் செல்ல மறுக்க முடியாததைப் போல், பிரிந்து செல்லாமல் இருக்க முடியாது. தன் கையால் நீர் வார்த்து வளர்த்து, இன்று மொக்கும் மலருமாக இருக்கும் முல்லைக் கொடி!— தினந்தோறும் அந்த முல்லை மலர்களைப் பறித்துச் சரமாகத் தொடுத்துக் கூந்தலில் சூடிக்கொள்வதில்தான் எவ்வளவு ஆனந்தம்! இந்த ஆனந்தம் போகிற இடத்தில் கிட்டுமா? போகிற இடத்தில் கணவன் மலர்ச்சரம் வாங்கித்தரலாம். இருந்தாலும் — தாய் வீட்டில் இருக்கும் காலத்தில் சூட்டிக் கொண்ட மாதிரி நிம்மதியாகச் சூடிக் கொள்ள முடியுமா? கொடுமைக்கார மாமியின் கொள்ளிக்கண் வெப்பத்தால்— அரக்கியான நாத்தனாரின் பொறாமைக்கண் வெம்மையால், கணவன் ஆசையோடு வாங்கிக் கொண்டு வந்த கதம்ப மலர்ச் சரம் கருகிவிடும்! சமையலில் எதிர்பாராத வண்ணம் ஏதாவது தவறு நேர்ந்துவிட்டால்— தாயாக இந்தால் அன்பாகக் கடிந்து கொண்டு, இனி பின் பற்ற வேண்டிய வழிகளைச் சொல்லிக் கொடுப்பாள். மாமியாக இருந்தால்...? மனச் சாட்சிக்கு மதிப்புக் கொடுக்காத ஒரு போலீஸ்காரன், ஒரு கைதியை அவன் ஒரு மனிதன் என்பதையும் மறந்து, மிருகத் தனமாய் நடத்துவது மாதிரி, கொடுமைப் படுத்துவாள்.

அவள் கண்களில் நீர் நிறைந்திருந்தது!

பழைய இடத்தின் பிரிவுக்கும், புது இடத்தின் நுழைவுக்குமான இடைவெளி நினைவுகளில் மிதந்த வண்ணம் அவள் மனம் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தது. ஜன்னல் கம்பிகளைப்பிடித்தபடி சுவரில் சாய்ந்து கொண்டிருந்தாள். நீர் நிறைந்த கண்

கள் வெளியே செருனவ அர்த்தமின்றிப் பார்த்துக்கொண்டிருந்தன. வாரி விடப்படாத கூந்தல் நெற்றியில் விழுந்து புரண்டுகொண்டிருந்தது. இந்த இடத்தின் வாசம் இன்னும் ஒரு சில மணி நேரந்தான். அதற்குப் பின் புருஷனேடு புதிய இடத்திற்குச் செல்ல வேண்டும். விரும்பினும் விரும்பாவிட்டாலும் சென்றுதான் தீர வேண்டும்! ஐயோ! நினைத்தாலும் நெஞ்சு நடுங்குகிறது. அருகில் வந்து நின்ருள், தாய். கல்யாணமாகிக் கணவனேடு செல்லப் போகும் தன் பெண் அழுதுகொண்டிருப்பதைக் கண்டாள்! பிரிவின் வேதனை, தாய்க்கு மட்டும் கிடையாதா? பெண்ணைப் போல் தாய் அழுது வெளிக்குக் காட்டிக் கொள்ள மாட்டாள். குடும்பச் சுமையாலும், பிரிவாலும், பிரிவுக்குப் பிந்திய சேர்க்கையாலும், அனுபவத் தழும்பேறிப் போனவள் தாய்! "அடி, அசடே!... இதுக்கெல்லாம் யாராவது அழுவாங்களா?......அழுது தான் முடியுமா?...ம்...நேரமாயிட்டுது. போயி குளிச்சி முழுகிட்டுத் தலை பின்னிக்கோ. வண்டிக்கி நேரமாயிட்டது..."—அன்புடன் கூந்தலைக் கோதிவிட்டபடி கூறினள் தாய். அவள் நெஞ்சிலும் வேதனை தளும்பிக் கொண்டுதான் இருந்தது. பெண்ணும் அழுகிருள். தாயும் அழுவதா? தீயைத் தீயால் அணைக்க முடியாதே!...

அவள் கண்களில் நீர் நிறைந்திருந்தது!

குளித்து முழுகிப் பட்டுச் சேலை உடுத்திக் கொண்டு வாரிப் பின்னப்பட்ட கூந்தலில் முல்லை மலர் சூடிக் கொண்டு, அழகின் உயிர் சித்திரமாய் நின்றுகொண்டிருந்தாள், அவள். எதிலும் மனப்பிடிப்பு இல்லை! எல்லாவற்றையும் இயந்திர ரீதியில் செய்து முடித்தாள். தாய் சாப்பிடக் கூப்பிட்டாள். சோறு என்ற சொல்லைக் கேட்டவுடன் அவளுக்கு வாந்தி வருவது போலிருந்தது. தாயின் வலுக்கட்டாயம்! ஏதோ சாப்பிட்டோம் என்று ஒப்புக்கு அந்தக் காரியத்தை முடித்துக்கொண்டு எழுந்தாள். கணவனுடன் செல்லப் போகிறோம் என்ற பூரிப்பையே காணும்! தாய் தந்தையரைப் பிரிந்து செல்ல வேண்டியதால் ஏற்பட்ட துயரச் சாயை தான், அவள் முகத்தில் படிந்திருந்தது. வாசலில் வண்டி வந்து நின்றது.

"...ம்...டயமாயிடுச்சி......" என்று, தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தபடி பிரயாண காலத்தில் மேற்கொள்ள வேண்டிய அவசரத்தை இன்னும் சற்று அதிகமாக்கினன், அவள் கணவன். கணவன் வீட்டில் நடந்து கொள்ள வேண்டிய முறைகளைப் பற்றிக் கணக்கற்ற தடவைகள் சொல்லியிருந்துங்கூட, கடைசித் தடவையாக மீண்டும் ஒரு முறை சொல்லிவிட்டுப் பெண்ணை ஆசிர்வதித்தாள் தாய். தந்தையும் ஆசிர்வதித்தார். கண்களில் நீருடன் மனதில் வேதனைச் சுமையுடன், அவள் வண்டியில் ஏறி உட்கார்ந்

தாள். அவளருகில் அவள் கணவன்! அவளுக்கு, வாழ்வில் புதிய அத்தியாயம் ஆரம்பித்து விட்டதென்ற நினைவு மாத்து விட வில்லை! தாங்கமுடியாத பிரிவின் வேதனையைக் கொண்டு வந்து கொட்டுவதாய் இருந்தது நிகழ்காலம். எதிர்காலம்,.....? தெரியவில்லை!— தடித்த கருந் திரைக்குப் பின்னாலிருக்கும் காட்சிமாதிரி! வண்டி நகர்ந்தது. "சென்றுவா" என்பதற்கடை யாளமாகக் கண்ணீருடன் தாய் தலையசைத்தாள். தந்தை கை யாட்டி விட்டுத் திரும்பிக்கொண் டார். துக்கம் போலும்! வேலைக் காரியின் கண்களிலும் நீர்த் துளிகள்! அவள் ஏன் அழ வேண்டும்? பழகிய பாசம்! கல்யாணமாகும் வரையும் வாழ்க்கை ஏதோ ஒரு பாதையில் ஓடிக் கொண்டிருந்தது. இனி அதன் பாதையே வேறு! வாழ்க் கையே இப்படித்தான்! எதிர் பார்ப்பவைகள்' நடக்காததால் மனம், ஏமாற்றத்தைத் தாங்கும் வலிமையிழந்து தெறித்துச் சிதறி விடுகிறது.

அவள் கண்களில் நீர் நிறைந் திருந்தது!

கணவன் வீட்டிற்கு வந்து நான்கு நாட்களாகின்றன. எதி லும் மன லயிப்பு இல்லை! தாய் வீட்டைப் பற்றிய நினைவுகளால் உள்ளம் தெளிவிழந்து விட்டது. இங்கு வருவதற்கு முன் நினைத் துக் கொண்டிருந்ததைப் போல், மாமியார் கொடுமைக்காரியாக இல்லாமல் பெற்ற தாயைப் போலிருந்தாள். நாத்தனார், உடன்பிறந்த தங்கை மாதிரி உயிருக்குயிராகப் பழகினாள். கணவனும் நல்லவன் தான். பெண் உள்ளமறிந்து இதமாக நடக்கத் தெரிந்த நாகரிக அறிவு பெற்றவன். இவ்வளவெல்லாம் இருந்துங்கூட, இந்தப் புதிய இடத்தில் மனம் இன்பத்தைக் காண மறுக்கிறது. ஏன்? எத னால்? எல்லாமே புதியதாய் இருப்பதாலா? வீட்டில் இப் பொழுது ஒருவருமே இல்லை. நாத்தி, பக்கத்து வீட்டிற்கு ஊர்க்கதை பேசப்போய் விட் டாள். மாமி, அப்பளத்திற்கு மாவு இடிக்கக் கோடி வீட்டிற்குப் போய் விட்டாள். வேலைக்காரி குளத்திற்குப் போனவள் இன் னும் வரவில்லை! இந்தத் தனிமை அவளுக்கு வெறுப்பை யூட்டு வதாய் இருந்தது—நிசப்தத் துடன் பயங்கரமும் நிலவும் மயானத்தின் நடுவிலிருப்பது மாதிரி! சாயந்திரமாகி விட்டது. கணவன், ஆபீசிலிருந்து வீடு திரும்பினான். அவன் கையில் கதம்பப்பூ! அவன் பார்த்தான், அவளும் பார்த்தாள்.

"சுலோ......"

"ஏன்?......"

"அம்மா இல்லியா?......"

"இல்லே......"

"எங்கே?......"

"அப்பளத்துக்கு மாவு இடிக் கப் போயிருக்காங்க?........"

"காமு......?"

"எதுத்த வீட்டுக்குப் போயி ருக்குது!"

அவள் அருகில் நெருங்கினான் அவன். கையிலிருந்த கதம்ப மலரை அவள் நீண்ட கூந்தலில் அவனே சூட்டினான். அவன் மனம் கிளுகிளுத்தது. பற்றிப் படர ஒருகொம்பு கிடைக்காமல் தத்தளித்துக் கொண்டிருந்த பசுங்கொடி மாதிரி—வெறுப்பும் வேதனையும் தரும் தனிமையில் இருந்த அவளுக்கு அவன் அருகிலிருப்பது ஆனந்தமாய் இருந்தது. அவன் மார்பில் சாய்ந்தாள். கூந்தலைக் கோதி விட்டபடி அவள் அழகான நெற்றியில் முத்தமிட்டான். அவன் ஸ்பரிசம் அவள் மனதுக்குத் தாயின் அணைப்பைப்போல் ஆனந்தம் தருவதாய்—நொந்துபோன மனதிற்கு ஆறுதல் அளிப்பதாய், பிரிவினால் புண்பட்ட உள்ளத்திற்கு அருமருந்தாய்—இதமாக – இன்பமாக இருந்தது! அவன் அணைப்பு, பிரிவின் வேதனையை மறைக்கும் பேரின்பமாக இருந்தது. அன்று, தாய் வீட்டிலிருந்து புறப்படும் பொழுது அழுததை எண்ணி வெட்கப்பட்டுக் கொண்டது அவள் மனம்! அதுதான் பெண்மையா?

"ஏன்னா, காபிசாப்பிடலையா?"

"நான் வேண்டாம்னு சொன்னேனா?"

அவன் சிரித்தான், அவளும் சிரித்தாள். மகிழ்வின் உள்ள நிறைவுடன் சிரித்தாள.

அவள் கண்களில் நீர் நிறைந்திருந்தது—ஆனந்தத்தால்!

வெளிவந்துவிட்டன! புதிய வெளியீடுகள்!

சிந்தனைச் சிற்பி ஸி. பி. சிற்றரசு எழுதியவை

சாய்ந்த கோபுரம்	1—0—0
மதி (நாடகம்)	1—0—0
விஷக்கோப்பை	1—0—0
மார்ட்டின் லூதர் (2-ம் பதிப்பு)	0-10—0
வெங்கலச் சிலை	0—8—0

தமிழ் மன்றம்
தபால்பெட்டி எண். 316.
தெப்பக்குளம் :: திருச்சி.

197802

சிங்காரி

நல்ல பொழுதுபோக்குப் படம். அன்றாட வாழ்க்கை வளத்திற்கு ஓடியாடி அலைந்து விட்டு, ஒரு சில மணி நேரங்கள் நிம்மதியாக ஓய்வுபெற விரும்புபவர்களுக்கு 'சிங்காரி' சந்தேகமில்லாமல் உகந்த படந்தான்.

சிங்காரி (லலிதா) ஒரு மாஜி கல்லூரி மாணவி! அவளுக்கு நாட்டியக் கலையின் மீது தணியாத ஆர்வம். நாடும் ஒரு நாட்டிய ராணியாகத் திகழுவோமா என்ற உள்ளுணர்வு அவளைச் சதா அரித்துக்கொண்டிருந்தது. கல்லூரி மேடையிலே ஆடுகிறாள். அக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய கலாமன்ற அதிபர் அவளை வெகுவாகப் பாராட்டுகிறார். கல்லூரி மாணவியின் எண்ணங் கவர்ந்த கலா மன்றத்தாரால் அவள் சிங்காரியாக மாற்றப்பட்டு இந்தியா முழுதும் திக்விஜயம் செய்யக்கிளம்பி விடுகிறாள். அவள் பெற்றோர்கள் தம் பெண்ணைக் காணாது தேடியலைந்து கடைசியில் பெண்ணையும், ஒரு பெரிய வரலாற்றையும் ரசிகர்களுக்குத் தருகிறார்கள்.

சிங்காரியின் கதைக்கு இடையிலே ஒரு ஏழை உழவனின் அனாதைப் பெண் வருகிறாள். அவள் அதிர்ஷ்டவசமாக ஒரு செல்வந்தனின் காரில் அடிபட்டு, அவர் வளர்ப்புப் பெண்ணாக மாறி, பத்மினியாக வளருகிறாள். ஏழு ஆண்டுகள் கழித்து, வீட்டை வெறுத்து வெளியேறிய செல்வந்தனின் 'பிராடிகல்' மைந்தன் பங்களாவிற்குத் திரும்புகிறான். அங்கே பருவமும் எழிலும் கொந்தளிக்கும் பத்மினியைக் காணுகின்றான். இருவர் மனமும் பக்குவப்படுகின்றன. அவர்கள் காதல் வாழ்க்கையில், 'கணவனும் மனைவியும்' போலவே வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் வாழ்க்கையில் புகுந்து விளையாடும் சிங்காரியின் செயலால் கதைப் போக்கில் சில விநோதக் குழப்பங்கள் எழுகின்றன. இறுதியில் எல்லாம் மங்களமாக முடிவடைகின்றது.

மொத்தத்தில் கதை, மலையுச்சிக்குச் செல்லும் பாதையைப் போல வளைந்து வளைந்து சென்றாலும், நேரம் போவதே தெரியவில்லை. படம் விறுவிறுப்பாக மூன்று மணி நேரம் ஓடுகிறது. துப்பறியும் கதைகளில் காணப்படும் பின்னல்கள் இருந்தாலும் ஒரே

சமயத்தில் நிகழும் மூன்று, நான்கு நிகழ்ச்சிகளையும் தொடர்வாக மாற்றி மாற்றிக் காண்பித்து விடுவதால், சிக்கல்கள் பிரமாதமாகத் தோன்றவில்லை.

வசனங்கள் இயற்கையாக அமைந்திருக்கின்றன. நடிகர்களுக்குத் தகுந்தவாறு, நடிகர்களை மனதில் வைத்துக் கொண்டே எழுதப்பட்டனவோ என்று எண்ணும்படியாக அத்தனை உயிர்த்துடிப்புடன் உள்ளன.

லலிதா, பாண்டியன் தோன்றும் கட்டங்கள் அனைத்தும் பரபரப்போடு முடிகின்றன. லலிதாவின் தமிழும் இப்படத்தில் ஓரளவு திருத்தம் பெற்றிருக்கிறது என்று சொல்லலாம். படம் முழுவதும் நகைச்சுவை அள்ளித் தெளிக்கப் பட்டிருக்கிறது. படத்தின் விறுவிறுப்புக்கு இதுவும் ஒரு முக்கியமான காரணமாகும்.

'நாம் இருவர்' புகழ் R. K. ராமசாமி சிங்காரியின் தந்தையாக வருகிறார். பிரமாதமாக நடிக்கிறார். இது அவருக்குப் பொருத்தமான பாத்திரம். வசனங்களும் அவருக்கிதமாக நறுக்குத் தெறித்தாற் போன்று அமைந்திருக்கின்றன. அப்பழுக்கில்லாமலிருக்கின்றன, அவர் தோன்றும் காட்சிகள்!

மற்றும் பத்மினி, சகஸ்ரநாமம், ராமச்சந்திரன், பாலசுப்பிரமணியம், ராதாபாய், பாக்கியம் முதலானோர் வழக்கம்போலத் தங்கள் பாகத்தை

அறிக்கை

விற்பனையாளர்கள், சந்தாதார்கள் பணம் அனுப்பும்போது 'பொன்னி' 'விருந்து'க்கென நன்கு விபரம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். எல்லாத் தொகைகளையும் "பொன்னி லிமிடெட்-சென்னை—21" என்ற முகவரிக்கே அனுப்பவேண்டுகிறோம்.

—பொறுப்பாளர்

உணர்ந்து நடிக்கின்றனர். நாட்டியக் குழு ஊருருக்குச் சென்று அரங்கமாடும் காட்சி ஆங்கிலப்பட மோஸ்தரில் அமைக்கப்பட்டிருக்கிறது. நாடக மேடை அரங்குகளைப் பொறுத்த மட்டில் டைரக்டர் சிறிது கவனஞ் செலுத்தியிருந்தால், சிங்காரியின் தரம் இன்னும் கொஞ்சம் உயரலாம்.

அனாவசியமாகப் புகுத்தியுள்ள 'நட்டுவனார்' சீன்களையும், கதைக்காகப் புகுந்துள்ள 'கலாட்டா' ஸ்டண்டுகளையும் நீக்கிப் படத்தின் அதிக நீளத்தையும், படம் பார்ப்பவர்கள் சலிப்பையும் குறைத்திருக்கலாம்.

பொதுவாகச் 'சிங்காரி,' சமுதாயத்தின் உண்மையான படப்பிடிப்பாக அமையவில்லையாயினும் கூத்தும், பாட்டும் நிறைந்த ஒரு உயர்தரமான உல்லாச விருந்து என்பதில் சந்தேகமில்லை! ஒருமுறை பார்க்கலாம்.

—விநோதன்

அவள் சிரித்தாள்!

வீர. பழனியப்பன்

வானத்தின் கீழ்த்திசையில் சூரியன் தலையைக் காட்டினான். பளபளக்கும் அவனுடைய முகத்தைக் காணப் பயந்த இருட்கன்னி ஒரு மூலையில் ஒளிந்து கொண்டாள். ஒளிக் கதிர்களின் ஒய்யார நடனத்தால் ஊரின் கோடியிலிருந்த 'ரயில்வே ஸ்டேஷன்', புளி போட்டு விளக்கிய பாத்திரம் போலத் தெளிவுபெற்றது.

அந்தப் 'பிளாட்பாரத்தின்' ஒரு கோடியில் படுத்திருந்த ரயில்வே போலீஸ் ரங்கசாமி கண்ணைக் கசக்கிக்கொண்டு எழுந்திருந்தான். அவனுக்குத் தூக்கம் சரியாகக் கலையவில்லை என்பதற்கு அடையாளமாக ஒரு கொட்டாவி கட்டியம் கூறியது. அவன் உடம்பை முறித்துக் கொண்டு சோம்பலை விரட்டினான். அவனுடைய கைகள், கசங்கியிருந்த காக்கி நிஜார்ப் பைக்குள் துழாவின. ஒரு கால் ரூபாய் நாணயம் அவன் கைகளில் தட்டுப்பட்டது. 'காக்கா' கடை 'சாயா' ஒரு 'கப்' குடித்தால்தான் அவனுடைய களைப்பு மாறும் போலிருந்தது. எழுந்தான்.

அந்தப் பிளாட்பாரத்திலேயே சில நடுத்தெரு நாராயணர்கள்—பஞ்சைச் சிறுவர்கள் படுத்திருந்தனர். தன்னுடைய அரண்மனையில் இந்தத் தரித்திரங்கள் படுத்திருப்பதை அவன் விரும்பவில்லை.

"ஏய் களவாணிப் பசங்களா! எவன் மூட்டையை அடிக்கிறதுக்கு இங்கே வந்து படுத்திருக்கீங்க? எந்திரிங்கடா கழுதைகளா" — கையிலிருந்த பெல்ட்டைச் சுழற்றிக்கொண்டு அந்த எதிரிகள்மீது பாய்ந்தான்.

அந்தத் தாக்குதலை எதிர்ப்பதற்கு அந்த அரைப்பட்டினிகளுக்குத் திராணி ஏது? மூலைக்கொருவராக ஓடினர்.

"இனிமே இந்த பக்கம் வாங்க, காலை வெட்டிடுறேன்!"—வெற்றியடைந்த அந்தப் போலீஸ் வீரன் ஓடிப்போனவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தான். பிறகு அவ்விடத்தை விட்டு நகர்ந்து வெளிப்புறத்துக்கு வந்தான். அவனுடைய கண்ணோட்டம் நாலாபக்கங்களிலும் சுழன்றது.

ரங்கசாமியினுடைய அதிகாரத்தின் எல்லைக்கோடு இரும்புக் கதவுகள் இரண்டுகொண்ட அந்த ரயில்வே ஸ்டேஷனின் வெளிவாயில் வரைக்கும் நீண்டு இருந்தது. அந்தக் கதவுகளுக்கு உட்புறத்தில் ஒரு சிறு வீடுபோன்ற

இடம். ஆனால் அதன் கதவுகள் எப்போதும் சாத்தியே கிடக்கும். அதற்கு வெளியே மங்களூர் ஓடு போட்ட ஒரு ஹால். என்றும் அந்த ஹாலில் ஒரு ஈ காக்கைகூட இருக்காது. ஆனால் அன்று......

அந்த இடத்தை ஒரு ஓட்டுப் போட்ட படுதா—இல்லை—ஒரு பழைய கந்தை மறைத்து இருந்தது. அந்தப் படுதாவிற்குப் பக்கத்தில் ஒரு பஞ்சை படுத்திருந்தான். அவனுடைய மடியிலே தலையை வைத்துக்கொண்டு இன்னொரு சிறிய உருவம்—அதாவது 'அந்தப் பஞ்சையின் வாரிசு' படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தது.

உள்ளேயிருந்து "ஹூம்... உம்...அம்மா, அப்பா" என்ற முனகல் ஓலம் கிளம்பிக்கொண்டிருந்தது.

தன்னுடைய தனிக் காட்டு ஆட்சியில் இந்தத் தரித்திரங்களுக்கு இடம் கொடுக்க அவனுக்குத் தைரியமில்லை.

"ரொம்ப சுகமாவுல்ல தூங்கிட்டு இருக்காரு! டேய் எந்திரிடா!!"—அவனுடைய அதிகாரத்தைத் தூங்கிக்கொண்டிருந்தவனிடம் காண்பித்தான் போலீஸ் ரெங்கசாமி.

தூங்கிக்கொண்டிருந்தவன் எழுந்திருந்தான். அந்த அவசரத்தில் அவன் மடியில் படுத்திருந்த குழந்தை மண்ணில் உருண்டுபோய் விழுந்தது.

"இது என்ன தர்மசத்திரம்னு நெனைச்சுக்கிட்டுக் கூடாரம் அடிச்சுட்டியா?" — ரங்கசாமி தனக்கே உரித்தான போலீஸ் மொழியில் கேட்டான்.

"எசமான்...வேறே எங்கேயும் படுக்குறதுக்கு இடமில்லேங்க. அதனாலதான்......" அந்தப் பஞ்சை குழைய ஆரம்பித்தது.

"இங்கே வந்து படுத்துட்டீங்க! ஒங்கப்பன் வீடுபாரு... ...எந்திருச்சு எங்கேயாச்சும் ஓடுடா?"—அவன் ரொம்ப எகத்தாளமாய்ப் பேச ஆரம்பித்தான்.

"வந்து...வந்து......எசமான் என் பொஞ்சாதி பிள்ளைத்தாச்சிங்க. சித்தே முந்தியிலேருந்து இடுப்பு வலி கண்டிருக்குங்க. இந்த நெலைமையிலே எப்படிங்க அளைச்சுக்கிட்டு போவ முடியும்?" அவன் கண்களில் நீர் துளித்தது.

"யம்மா...என்னாலே தாங்க முடியல்லியே! ஹூம்........ யப்பா"—உள்ளேயிருந்து முனகல் கிளம்பியது. ரங்கசாமி காக்கிச்சட்டை அணிந்தவனாய் இருந்தாலும் அவனுக்கே கொஞ்சம் பரிதாபமாய்ப் போய் விட்டது.

"டே......ஏண்டா இவளை இங்கே வைச்சுக்கிட்டுக் கஷ்டப்படுறே? ஆஸ்பத்திரிலே கொண்டுபோய்ச் சேரேண்டா... ......" அவன் வாயிலிருந்து கருணை முத்துக்கள் உதிர்ந்தன.

"ஆசுபத்திரி இங்கேருந்து இரண்டு 'கல்லு' தொலைவாம்ல, இவளை எப்படிங்க நடக்கவுட்டு அளைச்சுக்கிட்டுப் போவமுடியும்? வண்டிச் சத்தத்துக்கு

நாலு காசு, யாருகிட்டயாச்சும் 'பிச்சை' யெடுத்துத்தான் அலேச்சுக்கிட்டுத் போவனுங்க"—அவனுக்குப் 'பிச்சையெடுத்துத்தான்' என்று சொல்லும் போதுஒரு அவமான உணர்ச்சி தோன்றியது.

ரங்கசாமிக்கு இதைக் கேட்டதும் 'என்னமோபோல' இருந்தது. அவன் கைகள் மெதுவாகக் கால் சட்டைப்பைக்குள் நுழைந்தன. 'அப்பரம் நாஸ்தாவுக்கு என்ன செய்வது?' என்ற உணர்ச்சி அவன் கையில் கடித்து அதை வெளியில் விரட்டியது.

"என்னவோ தொலேஞ்சு போ...இம்..." ரங்கசாமி அவ்விடத்திலிருந்துபோய்விட்டான். அவனுல் செய்ய முடிந்த உதவி அவ்வளவுதான்!

போலீஸ் போனபிறகுதான் அந்தப் பஞ்சை மனிதனுக்கு நல்ல உயிர் வந்தது. மண்ணில் உருண்டு கிடந்த தன்னுடைய குழந்தையைப் பார்த்தான். அது நன்ருகத் தூங்கிக் கொண்டிருந்தது. அதற்கு என்ன களேப்போ! அவன் மெதுவாகக் குழந்தையைத் தூக்கிஞன். அதற்குள் உள்ளேயிருந்து, "கொஞ்சம் இப்படி வாங்களேன்..." என்று முனகல் கலந்த அழைப்பு வந்தது.

"ஏம் புள்ளே" என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தான். அங்கே பழைய துணிகள் கட்டப்பட்ட ஒரு மூட்டையைத் தலேயணையாக வைத்துக் கொண்டு அவன் மனேவி படுத்திருந்தாள். அவள் உடம்பைக் கிழிந்த கந்தல் சுற்றிக்கொண்டிருந்தது. வறுமையின் கோரக் கைகளில் இன்ஞெரு உயிரைத் தத்தம் செய்ய அவள் தன்னேச் சித்தப்படுத்திக் கொண்டிருந்தாள்.

"வலி ரொம்ப சாஸ்தியாக இருக்கு! கொஞ்சம் வயத்துப் பக்கத்தைத் தடவிக்கொடேன்" என்று தன்னுடைய புருஷனிடம் வேண்டுகோள் விடுத்தாள்.

"இந்தமாதிரியெல்லாம் படனும்னு நம்ம தலேயெழுத்து!"—அவன் அவளுடைய அடிவயிற்றை மெதுவாகத் தடவிக் கொடுக்கலாஞன்.

அவனுடைய தோளில் கிடந்த குழந்தை விழித்துக் கொண்டது.

"அம்மா......ஹ்ஹா...ஊம் அப்பா..."—கர்ப்பிணி கதற ஆரம்பித்தாள். அவள் கணவன் தடவிக்கொண்டே இருந்தான்.

அந்தச் சிறு குழந்தைக்கு 'ஏன் அம்மா அழுகிருள்?' என்று புரியவில்லே. மெதுவாக அவனுடைய தோளிலிருந்து இறங்கித் திரைக்கு வெளியில் வந்தது. அந்த இடமே குழந்தையின் கண்களுக்கு ஒரு புதுமையாகத் தென்பட்டது; மெதுவாக நடந்துகொண்டே ஸ்டேஷனின் வெளிவாயிலேத் தாண்டியது.

வெளிவாயிலே ஒட்டியவாறு ஐந்தடிப் பாதை இருந்தது. அந்தப் பாதையில் இரண்டு கிழவிகள் இட்லி, தோசை, ஆப்

பம் விற்றுக்கொண்டிருந்தனர். மூட்டை தூக்கிகள் கும்பல் ஒன்று அந்தக் கடைகளில் உட்கார்ந்துகொண்டு ஆப்பத்தையும், தோசையையும் தின்றுகொண்டிருந்தது. கர்ப்பிணியின் நடக்கும் குழந்தைக்கு இதையெல்லாம் கண்டவுடன் நாக்கில் நீர் ஊறியது. அது தன்னுடைய கூனவயிற்றைத் தடவிப் பார்த்தது. வயிறும் காலியாகத் தான் இருந்தது. மெதுவாக முதல் கடைக்காரக் கிழவியிடம் சென்றது.

"ஆத்தா...ஆத்தா, ஒரு ஆப்பம் தா......ஆத்தா"—மிகவும் உரிமையுடன் கேட்டது.

"எம்மாம் காசு வைச்சுருக்கே! காசை குடு!"—ஆப்பக்காரி அந்தக் குழந்தையை நோக்கிக் கேட்டாள். குழந்தை 'திருதிரு'வென்று விழித்தது. காசு எப்படி இருக்கும் என்பதுதான் அதற்குத் தெரியுமே தவிர, காசு கொடுத்துத்தான் ஆப்பம் வாங்கவேண்டும் என்ற நியதி அதற்குத் தெரியாது!

"மூஞ்சியைப்பாரு, மூதேவி! காசு இல்லாம ஆப்பம வாங்க வந்திருக்கியா!" என்று ஏளனமாக ஏழைக் குழந்தையின்மீது பாய்ந்தாள் ஆப்பக்காரி.

வறுமை அவளுடைய உள்ளத்தில் ஊறும் கருணையை வரண்டு போகும்படி செய்து வைத்திருந்தது.

ஏக்கம் நிறைந்த கண்களோடு அந்தக் குழந்தை பின்னடைந்தது. விரும்பியது கிடைக்க



வில்லையே என்று அது தானுகவே பொருமிக்கொண்டு பெற்றோர் இருக்கும் இடத்திற்குச் சென்றது. அங்கே......

கர்ப்பிணி இன்னும் முனகிக் கொண்டுதான் இருந்தாள்.

அந்தக் குழந்தைக்கு அப்பாவையும் அம்மாவையும் பார்த்ததும், பொருமல் மாறி அழுகை பிய்த்துக்கொண்டு கிளம்பியது. அப்பனுக்குக் குழந்தை அழுது கொண்டு நிற்பதைக் கண்டதும் எரிச்சல் உண்டாகியது.

"ஏன் கழுதை அழுவுறே!"—ஒரு சீறல் கிளம்பியது.

"வவுத்தேப் பசிக்குது. ஆப்பம் வாங்கித் தா" என்று குழந்தை முரண்டு செய்தது.

"கழுதை, இங்கே எதுவும் கத்திக்கிட்டு நின்னே, கழுத்தை முறிச்சுப் போட்டுடுவேன். பேசாம இருக்கணும் தெரியுமா?" என்று அதட்டிக் கூறினுன்.

அப்பனிடம் காசு இல்லாமல் இது மாதிரி அதட்டுகிருன் என்று அந்தக் குழந்தைக்கு எங்கே தெரியும்? அது தன் போக்கிலேயே புலம்ப ஆரம்பித்தது.

"ஆப்பம்...ம்...ம்..."

ஒரு பக்கம் மனைவி படும் கஷ்டத்தைக் கண்டு கலக்கம், மறுபுறம் குழந்தை செய்யும் பிடிவாதத்தைக் கண்டு ஆத்திரம். கஷ்டமும் ஆத்திரமும் சங்கமமாகும் போது கோபச் சுழல் ஒன்று தோன்றியது.

பளார்.....பளார்......இரண்டு அடிகள் குழந்தையின் மீது விழுந்தன.

"கத்தாதே ஹூம்......கத்தாதே"—கண்டிப்பு, உறுமல், பயமுறுத்தல். அந்தக் குழந்தை வாயைப் பொத்திக் கொண்டு நின்றது.

"ஏன் அதைப் போட்டுக் கொல்லுறே?"—மெலிந்த குரலில் கர்ப்பிணி கேட்டாள். அவன் பேசாமல் இருந்தான். இரண்டு சொட்டுக் கண்ணீர் கீழே உதிர்ந்தது. அவன் கவலை தோய்ந்த கண்களோடு தன்னுடைய கைகளைப் பார்த்தான். அந்தக் காய்ப்பேறிய கைகள் அவனை நோக்கிச் சிரித்தன.

"ஒரு காலத்திலே இதே கைகள் நாலைஞ்சு ரூபா சம்பாதிச்சிப் பார்த்துது. இன்னிக்கி அதே கைகள் அழுவுற குழந்தைக்கு ஆப்பம் வாங்கிக் கொடுக்க முடியாம, அதை அடிச்சு அழவிட்டு வேடிக்கை பாக்குது!"— அவனுடைய மனமே அவனைச் சித்திரவதை செய்தது!

அவன் உடல் பசி பட்டினியால் தளர்ச்சியடைந்திருந்தாலும், நூலும், தறியும் கிடைத்தால் அவனுல் சம்பாதித்துவிட முடியும் என்ற தைரியமிருந்தது. ஆனுல்......நூல் எங்கே கிடைக்கிறது?

இன்று அவன் பிழைக்க வேண்டுமானுல், பிச்சை எடுப்பதைத் தவிர வேறு வழியே கிடையாமல் மற்ற பாதைகள் அடைக்கப்பட்டிருந்தன.

அடிபட்ட குழந்தை விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தது! பிரசவ வேதனையால் அவள் துடித்துக்கொண்டிருந்தாள்! கல்லுப்பிள்ளையார் போல அவன் உணர்ச்சியற்று உட்கார்ந்து கொண்டிருந்தான்.

ஆனால் நேரம் ஓடிக்கொண்டு தான் இருந்தது.

ஒன்பதரை மணி வண்டி ஓசை செய்தவாறே ஸ்டேஷனுக்குள் நுழைந்தது.

பலவகைச் சத்தங்கள், அவனை உணர்வுபெறச் செய்தன.

அழுதுகொண்டிருந்த தன்னுடைய குழந்தையையும், தொல்லைப்பட்டுக்கொண்டிருக்கும் மனைவியையும் பார்த்தான்.

'குழந்தையையாவது கவனித்துக்கொள்ளலாம்! பிரசவ வேதனையால் துடித்துக்கொண்டு இருக்கும் இவளை எப்படி நான் தனியாக இருந்து கவனித்துக் கொள்ளமுடியும்?' அவன் மனம் அவனை நோக்கிக் கேட்டது.

"என் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் விட்டால்......" அவன் உள்ளத்தில் ஒருமின்னல்.

"அதற்குக் காசு வேண்டாமா?" அந்தமின்னல் மறைந்து விட்டது. அவனுக்கு ஒரே குழப்பம். ரயிலிலிருந்து இறங்கிய மக்கள் போய்க்கொண்டிருந்தனர். அவர்களைக் கண்டதும் அவன் ஒரு முடிவுக்கு வந்து விட்டான்.

மெதுவாகப் போவோரிடையே புகுந்தான்.

"ஐயா...என் பொண்டாட்டி சாகப் பொழைக்கக் கெடக்கிறுய்யா. அந்த ஏழை மொகம் பார்த்து ஏதாவது கொடுங்க ஐயா..." பிச்சை எடுக்க ஆரம்பித்தான். போகிறவர்கள் இவனை ஏற இறங்கப் பார்த்தார்களே தவிரக் காசு ஒருவரும் போடவில்லை. அவர்களுக்குப் பின்னுல் ஒரு கும்பல் வந்தது.

"ஐயா தருமப் புண்ணியவான்களே! நான் ஒரு ஏழை நோயாளி ஐயா! என் பொண்டாட்டி பிரசவவேதனை பட்டுக்கிட்டு இருக்கா ஐயா! உங்களுக்குப் புண்ணியம் உண்டு ஐயா! ஏதாவது தர்மம் செய்யுங்க ஐயா!" என்று தன்னுடைய சுலோகத்தை மாற்றிக் கொண்டு பிச்சை கேட்க ஆரம்பித்தான்.

அந்தக் கும்பல் நின்றது.

"ஐயா...ஏழைக மேலே இரக்கம் வையுங்க ஐயா! ஐயா!" ஒவ்வொருவரிடமாகக் கையை ஏந்திக்கொண்டு சென்ருன்.

"பாருங்க பிரதர்! நாட்டோட நிலைமையை. நெசவாளிக் குடும்பம்போல இருக்கு! நூல் கெடைக்கல்லே. பிச்சை எடுக்கிருன். ஊம்..."

ஒரு சில செப்புக் காசுகள் அவன் கையில் விழுந்தன. அவர்கள் போய்விட்டனர். அவர்களுக்குச் செப்புக் காசுக்குப்புண்ணியம் கிடைத்துவிடும் என்ற எண்ணம்போலும்! ஆனுல் ஒரேசிறுவன் மட்டும் அவனையே உற்று நோக்கிக்கொண்டு இருந்தான்.

சந்தடி குறைந்துகொண்டே வந்தது. அவனுடைய ஓலமும் அடங்கிவிட்டது. அவன் கையி

விருந்த காசுகளை எண்ணினான். "ஒண்ணரையணு ... இம்......ம் ...ம்" அவன் உதட்டிலிருந்து ஒரு பெருமூச்சு கிழித்துக் கொண்டு கிளம்பியது. கையிலிருந்த ஒன்றரையணுவினால், அவனுடைய மனைவியை ஆஸ்பத்திரிக்கு அழைத்துக்கொண்டு போக'வண்டிச்சத்தம்'கொடுத்துவிடமுடியாது என்று அவனுக்குத் தெரியும். 'அடுத்து என்ன செய்வது?' என்று ஆலோசித்தான். அழுதுகொண்டு நிற்கும் குழந்தையின் நினைவு அவன் கவனத்துக்கு வந்தது. பசிப் பிரச்னையைப் போக்குவதற்குக் கையிலிருந்த காசை எடுத்துக் கொண்டு சென்றான்.

அவனையே பார்த்துக்கொண்டிருந்த சிறுவனுக்கு, அவனுடைய செயல்கள் ஒன்றும் புரியவில்லை. அவனுடைய கண்கள் திரையிட்டு மூடியிருக்கும் இடத்தில் திரும்பின. மெதுவாக அதைநோக்கிச் சென்றான்.

உள்ளே இருந்து வெளிவந்து கொண்டிருந்ததீனக்குரல் அவன் செவிகளில், தெளிவாக விழுந்தது. திரையை விலக்கி உள்ளே தன்னுடைய பார்வையைச் செலுத்தினான். வேதனையால் நெளிந்துகொண்டிருந்த அந்த உருவத்தைக் கண்டான். அவன் கண்களில் பரிதாபம் பரவியது.

அதற்குள் அந்தக் கர்ப்பிணியின் கணவன் கையில் மூன்று ஆப்பங்களை ஏந்திக்கொண்டு வந்துவிட்டான்.

"இங்கே...வாய்யா..." அந்தச் சிறுவன் அவனை அழைத்தான். அவன் ஒன்றும் புரியாமல் அந்தச் சிறுவனிடம் வந்தான்.

"இந்தா இதை வாங்கிக்க!" என்று தன்னுடைய பையைத் தடவி, அதனுள் கிடந்த 'ஒரு அணு' நாணயத்தை அவன் கையில் போட்டுவிட்டுப் போய் விட்டான்.

கையில் இருந்த நாணயத்தைக் கண்டதும் அவனுக்குப் பிரமை தட்டியது.

"இந்தச் சின்னக் குழந்தையைப் போல மற்றவர்களும் இருந்தா...?" என்று அவன் மனம் எண்ணியது.

எல்லோரும் குழந்தையாக இருந்துதான் பெரியவர்கள் ஆகிறார்கள். ஆனால் குழந்தை உள்ளத்திலே இருக்கும் இரக்கம் அன்பு எல்லாம் வளர்ச்சியிலே, சமூகம் போடும் ஏற்றத் தாழ்வு என்ற 'இஞ்செக்ஷனினால்'மாறி மறைந்துவிடுகிறது என்பதை அவன் கண்டானு?

உள்ளேசென்று கையிலிருந்த ஆப்பத்தில் இரண்டைக் குழந்தையிடம் கொடுத்தான். அதனுடைய அழுகையெல்லாம் மறைந்துவிட்டது. ஆப்பத்தை விழுங்குவதில் தன்னுடைய கவனத்தை அக்குழந்தை செலுத்த ஆரம்பித்தது.

"இந்தா ஒனக்கு ஆப்பம் வேணுமா?"

"எனக்கு இப்ப ஒண்ணும் வேணும். ஐயோ... அம்மா..."

உலகத்தை ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டிருந்த சூரியன், கொஞ்சம் கொஞ்சமாகத் தைரியத்தை வரவழைத்துக்

கொண்டு நேரடியாகப் பார்க்க ஆரம்பித்துவிட்டான். ஆனல் உலகம் என்னவோ முன்னைப் போலத்தான் இருந்தது!

இப்பொழுது அந்தக் கர்ப்பிணி முனங்கிக்கொண்டிருக்கவில்லை—கதறிக்கொண்டு இருந்தாள். அவளுக்குத் தாளமுடியாத வேதனை. அவள் உடலைப் போர்த்தியிருந்த உடைகள் நனைந்துகொண்டுவந்தன. அவள் கணவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

யாரைக்கூப்பிடுவது? என்ன செய்வது? இந்த இரண்டு கேள்விகள் அவன் இதயத்தைக் கலக்கின. அங்கிருந்து ஓடினன்.

அவன் வரும்போது ஆப்பம் விற்றுக்கொண்டிருந்த கிழவி அவன் பின்னல் வந்துகொண்டிருந்தாள். அவள் உள்ளே சென்று கதறிக்கொண்டிருந்த கர்ப்பிணியின் மீது தன்னுடைய கண்ணோட்டத்தைச் செலுத்தினள். அவள் முகத்தில் ஒரு திருப்தி ஒளி பரவியது.

"ஒண்ணுமில்லே ... பனிக்கொடம் ஒடைஞ்சு இருக்கு நீ ஒண்ணுக்கும் பயப்படாதே! இன்னும் கொஞ்சம் நாழியிலே புள்ளே பொறந்துடும்." அவள் ஆறுதல் மொழிகள் அவனுக்குக் கூறினள். அவனுக்குக் கொஞ்சம் நிம்மதி பிறந்தது.

"ஆ, ஐய்யோ......என்னலே தாங்க முடியல்லியே...இஸ்... ஸ்...ஹும்," கர்ப்பிணியின் 'கதறல்' அந்தக் கட்டிடத்தின் அஸ்திவாரத்தையே ஆட்டியது.

"இந்தா... தம்பி நீ கொஞ்சம் வெளியிலே போய் இரு...நான் பாத்துக்குறேன்" ஆப்பக்காரக் கிழவி அவனிடம் ஒருமாதிரியாகப் பார்த்துக்கொண்டு கூறினள். அதன் பொருள் அவனுக்குப் புரிந்தது. தன்னுடைய குழந்தையை இழுத்துக்கொண்டு வெளியே வந்து உட்கார்ந்தான்

உள்ளேயிருந்து கதறல் கேட்டுக்கொண் டிருந்தது. வெளியில் உட்கார்ந்துகொண்டிருந்த அவன் உலகத்திலுள்ள கடவுள்களுக்கு எல்லாம் 'கருணை மனு' அனுப்பிக்கொண்டிருந்தான். அவனுடைய குழந்தையோ, ஒன்றும் புரியாமல் விழித்துக்கொண்டிருந்தது.

மணிக்கூண்டில் மணி மூன்று அடித்தது. உள்ளேயிருந்த கிழவி வெளியே வந்தாள்.

"தம்பி... தம்பி. சீக்கிரமா வெத்திலையும் வேப்பெண்ணெயும் வாங்கிட்டுவா!" அவள் படபடப்போடு கூறினள்.

"இப்ப என்னமா யிருக்கு!"

"நளிர் கண்டது மாதிரி இருக்கு சிக்கிரமாப்போயி வாங்கிட்டுவாயேன்"

இதைக் கேட்டதும் அவன் ஸ்தம்பித்துப்போய்விட்டான்.

"சல்தியாப் போய் வாங்கிட்டு வா." கிழவியின் அலறல் அவனுக்குப் பிரக்ஞையை உண்டாக்கியது. அவன் கையில் சிறுவன் கொடுத்த ஒரு அணு இருந்தது. கடைத்தெரு நோக்கித் தலைதெறிக்க ஓடினன்.

ஐந்து நிமிடங்கள் கூட ஆயிருக்காது. அவன் வெத்

விற்பனையாகிறது

அரிய ஆராய்ச்சி நூல்கள்

1. சட்டம் யாருக்கு? 0–4–0

முன்னேற்ற எழுத்தாளர் மா. தங்கவேலர் தீட்டியது:

2. இராவணன் ஓர் அறத் தமிழன் 0–4–0

இளம் எழுத்தாளர் 'பித்தன்' தீட்டியது.

விற்பனையாளருக்கு 25% கழிவு தரப்படும்

விபரங்களுக்கு :

பொது அறிவுப்பண்ணை
சென்னை—5

குறிப்பு :—புத்தகப் பட்டியலுக்கு எழுதவும்.

திலையும் வேப்பெண்ணெயும் வாங்கிக்கொண்டு வந்துவிட்டான். அவன் உடம்பெல்லாம் கவலையால் வெடவெடத்துக் கொண்டிருந்தது. படுதாவுக்குள் நுழைந்தான்.

அங்கே அவன் மனைவி நளிர் கண்டுநடுங்கிக்கொண்டிருந்தாள். அவள் உதடுகள்மட்டும் பழைய முணுமுணுப்பை விட்டுவிட வில்லை.

வெத்திலையில் வேப்பெண்ணெயைத் தடவி, அனலில் இட்டு வாட்டி நெற்றியிலும், கன்னங்களிலும் ஒத்தடம் கொடுக்க ஆரம்பித்தாள் ஆப்பக்காரக் கிழவி.

"ஆ, அம்மாடி," என்று கர்ப்பிணி அலறினாள். அவள் கைகள் தானாக வயிற்றைப் பிடித்துக் கொண்டன. கிழவி ஒத்தடம் கொடுப்பதை நிறுத்திவிட்டு அவள் அடிவயிற்றைத் தடவிப் பார்த்தாள்; அவள் முகத்தில் ஏனோ ஒரு வாட்டம்? இதைக் கண்டதும் அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"என்ன...என்ன..."—அவன் பிதற்ற ஆரம்பித்தான்.

"உம்...வயித்துளே புள்ளே இசெகேடா இருக்குது! நளிர் வேறே! எனக்கு நம்பிக்கையில்லே! என்னமோ நீகொடுத்து வைத்தது அவ்வளவுதான்."

"ஐயோ இனி நான் என்ன செய்வேன்!" அவன் அலறிக் கொண்டு கையைப் பிசைந்தான். கர்ப்பிணிக்கு 'மேல்மூச்சு' வாங்கத்தொடங்கியது. இந்தக் 'கூத்தை' யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அந்தக் குழந்தை ஒன்றும் புரியாமல் தானும் கதறத் தொடங்கியது.

இந்தக் கதறலும், அலறலும் அந்தக் கர்ப்பிணியின் காதுகளில் விழுந்ததாகவே தெரியவில்லை. அவளுக்கு மூச்சு அடைத்து அடைத்து வெளிவந்துகொண்டிருந்தது. அவள் உயிர் அந்தரத்தில் நர்த்தனமாடிக்கொண்டுஇருந்தது! அவள் வயிற்றிலுள்ள குழந்தைக்குத் தாய்படும் கஷ்டத்தைக்கண்டு கொஞ்சம்கூட இரக்கம் உண்டாகவில்லைபோலும்! உள்ளேயே இருந்துகொண்டு மேலும் மேலும் அவளுக்கு உபத்திரவத்தைக் கொடுத்துக்கொண்டு

இருந்தது. அவள் புழுப்போலத் துடித்தாள்.

"ஹாஹாம்ம்ம்... இம்"— அவள் அடிவயிற்றிலிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு கிளம்பியது. தலை தானாகவே தொங்கியது. அவளுடைய உயிர் போய் விட்டது.

"ஐயோ" என்று அவன் இந்தச் சாவின் கோரத்தைக் காணப் பொறுமல் வயிற்றிலும்வாயிலும் அடித்துக்கொண்டான்.

அவ்வளவு நாழிகையாய் அவனுடைய துன்பத்தைக் கவனிக்காதவர்கள் இப்பொழுது அவனுடைய சோகப் புலம்பலை ரசிக்க வந்துவிட்டனர். ரெயில்வே போலீஸ் ரங்கசாமி, பிளாட்பாரம் பொறுக்கும் 'பெரிய மனிதர்கள்' பிரயாணத்துக்கு வந்தவர்கள், போவோர்கள் வருவோர்கள் எல்லோரும் அக்காட்சியை ரசித்துக்கொண்டு தங்கள் மனதிற்குத்குத் தோன்றியவைகளை எல்லாம் அளந்து கொண்டு இருந்தனர். அந்தக் கூட்டத்தின் மூலையிலே காலையிலே ஓரணு கொடுத்த அந்தச் சிறுவனும் நின்றுகொண்டிருந்தான். அவன் கண்களில் நீர் கசிந்துகொண்டிருந்தது!

'பூம்...பூம்...பூம்'—என்று ஒரு லாரி அலறிக்கொண்டு அங்கே வந்து நின்றது. அதிலிருந்து யாரோ அதிகாரிகள் இறங்கினர்.

"இது யாரு உன்னுடைய மனைவிதானே?" என்று வந்த அதிகாரிகளில் ஒன்று அழுதுகொண்டிருந்த அவனை நோக்கிக் கேட்டது.

அவன் தலையை அசைத்தான். அவன் முகமெல்லாம் அழுது சிவந்து இருந்தது.

"சரி பிணத்தைத் தூக்கிட்டு வந்து லாரியிலே போடு!"—அந்த அதிகாரி பக்கத்திலிருந்த தன்னுடைய சிப்பந்திக்கு ஆக்ஞை பிறப்பித்தான்.

கர்ப்பிணியின் பிணம் தூக்கிக் கொண்டு வரப்பட்டது. அவளுடைய முகத்தை அவன் கிட்டே நெருங்கிப் பார்த்தான். அவன் கண்களை நீர்த்திரை மறைத்தது. அவளுடைய உதடுகள் விலகிப் பற்கள் வெளியே தெரிந்துகொண்டிருந்தன. அவள்சிரித்துக்கொண்டிருந்தாள்

அவன் அலறினன்; அவனுடைய குழந்தை கதறியது.

"பிணத்தை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்ச் சோதனை செய்யணும். நீயும் வண்டியிலே ஏறிக்கோ" என்று அதிகாரி அவனிடம் உத்தரவிட்டார்.

லாரி புறப்பட்டது.

கூடியிருந்தவர்கள் தங்கள் தங்கள் வேலைகளைக் கவனிக்கச் சென்றுவிட்டார்கள். அவர்களுடைய அனுதாபமெல்லாம் இன்னும் கொஞ்ச நேரத்தில் மறைந்துவிடும்! அது அவர்களுடைய குற்றமல்ல. அவர்களது கருத்துக்குச் சமூகம் அளித்த பயிற்சி அது!

உலகத்தின் நிலையை, போக்கைக் கண்டு நாணிச் சூரியன் மேற்கு மூலையில் தலையைப் பதித்துக்கொண்டான். அவன் ஒருவனுக்குத்தான் அவளுடைய 'சிரிப்பி'ன் கருத்துப் புரிந்தது போலும்!

List of 1st Prize winners of C. No 61. (1) S. Nagiah, Waltair. (2) M. S. Sahib, Madras. (3) I. Ch. Nandy, W. Bengal. (4) M. M. Bose Bihar. (5) V. Ree, Bharatpur. (6) M. S. V. Bros, Shimoga. (7) S. Yellaya, Waltair. (8) D. R. K. Murthy, Tumkur. (9) M. J. V. Nathan, Poona. (10) G. Dhandu, 24 Paragans & (11) M. D. Prasad, Saran. In addition 37 persons are awarded 3rd prize and 7 the 5th prize.

Full particulars are published in the Rainbow dated 10—11—51

ரிஜிஸ்டர் நெ. 249 — ரூ. **25,000** பரிசு — போட்டி நெ. 63

M S Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்ரும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000 முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.

RAINBOW COMPETITIONS
KEY S. NO. 61 *83 TO 98=362

91	89	88	94
86	96	97	83
98	84	85	95
87	93	92	90

We hereby certify that the above is the solution in original deposited with us by *Rainbow Competitions No.* 61 on 1-10.51 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.

V. Ramanday 3.11.51
Agent. Madras

முடிவு தேதி 27-*11*-51 விடை *12-12-51*

பிரவேசக் கட்டணம் : கூபன் 1-க்கு ரூ. *1*-0-*0* 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. **5**-0-0

438



விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— *102* முதல் *117* வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினலும் 438 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும், அல்லது 4 அணு ஸ்டாம்பு அனுப்பினல் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

THE RAINBOW COMPETITIONS No. **63**

28 (14) Thandavaraya Gramani Street, Tondiarpet, MADRAS - 21

Edited, Printed and Published by Murugu Subramanian for Ponni Ltd., at Ponni Achakam, 10 ... Amman Koil Street, Tondiarpet, Madras - 21.

197802
சென்னை 600 008

சிறந்த கதை விருந்து

சிறு கதைகள்

தாஜ்மஹால்	...	நா. பாண்டுரங்கன்	...	0—8—0
வீடும் விளக்கும்	...	சுகி	...	0—8—0
நினைவுச் சின்னம்	...	இளமைப்பித்தன்	...	1—0—0
கடல் முத்து	...	எஸ். ஆறுமுகம்	...	1—0—0
அமிர்தம்	...	,,	...	1—0—0
உலக அரங்கில்	...	டி. கே சினிவாசன்	...	1—0—0
இன்பக் கனவு	...	இராதாமணாளன்	...	0—12—0

நாவல்கள்

அழகு நிலா	...	ரா. தணலன்	...	1—0—0
முகராத முல்லை	...	வி. ஆர். நரசிம்மராஜ்	...	2—0—0
இன்ப இரவு	...	ராஜகுமாரி	...	0—8—0
இன்ப லாகிரி	...	ஸ்ரீராம்	...	0—8—0
இதயக் குமுறல்	...	எஸ். சதாசிவம்	...	1—8—0
லட்சியப் பாதை	...	க. நாராயணன்	...	2—0—0

ரூபாய் 5-க்குக் குறைந்து வி. பி. பி. அனுப்பப்படமாட்டாது.
முன்பணம் அனுப்புவோருக்கு மட்டுமே தபாற் செலவு இலவசம்.

பொன்னி லிமிடெட் :: சென்னை - 21

அக்டோபர்
29௳
முதல்
தமிழ் நாடடங்கும்
வெற்றிகரமாக
நடைபெறுகிறது
நேஷனல்
புரொடக்ஷன்ஸ்
சிங்காரி
ஸ்டூடியோ
நியூடோன்
வசனம்
வி.என்.சம்பந்தம்
டைரக்ஷன்
T.R.ரகுநாத்
குமரவேல்
ரிலீஸ்
MUHL